# ஸ்ரீ கௌரம்மகத உத்தாபின சாங்கியம்


## ஆழ்வார்களின் அழகோவிய பாசுரங்கள்



Rs. 150/-

ஸ்ரீ

# கௌரி அம்மன்



R. செல்வராஜ்
அம்பாள் நகர், 2வது வீதி,
மணியகாரன்பாளையம்,
கணபதி, கோவை – 641 006.
செல் நெ. : 94866 49931

# ஸ்ரீ கௌரம்மகத உத்தாபின சாங்கியம்

# முன்னுரை :



தாய் தந்தையிர் N. ராமசாமி நாயுடு - R. ரங்கநாயகி அம்மாள் அவர்களின் நல்லாசியுடன் கோவை மாவட்டம் கணபதி கிராமம் மணியக்காரன் பாளையத்தில் உள்ள கம்மகுல பெரியோர்கள் துக்கினார் நம்பூரார் குல மக்களின் பரிபூர்ண அன்புடன் ஆசீர்வாதத்துடனும் உருவானது இந்த நூலின் தொகுப்பு.

அன்பும் பண்பும் நிறைந்து சொல்வாக்கும் செல்வாக்கும் பெற்ற நமது குல மக்கள் கிராமம் தோறும் குல தெய்வ கோயில்களை ஏற்படுத்தி வழிபாடு செய்து வந்தனர். அவர்களுக்கு உண்டான சீர்முறைகளை தவறாமல் செய்து வாழ்க்கை நெறியை கடைபிடித்து வளமுடன் வாழ்ந்து வந்தனர். நம் வாழ்க்கை செழிப்புற முன்னோர் வழிபாடு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து கடைபிடித்து வாழ்ந்தனர். கோவையில் போதிய நீர் வளம் இல்லாததால் நமது முன்னோர்கள் நிலங்களை சீர்படுத்தி நீர்வளத்திற்காக கிணறுகள் தோண்டியும், மிகவும் பாடுபட்டு விவசாய நிலங்களை உருவாக்கி சாகுபடி செய்தனர். கம்ம குல மக்கள் மங்களகரமான நெல், மஞ்சள், வாழை, பாக்கு வெற்றிலை ஆகியவற்றை பயிர் செய்து மற்றும் பருத்தி, ராகி, சோளம், நெல் மற்றும் தானிய வகைகளையும் சாகுபடி செய்து பசுமையான நிலங்களாக மாற்றினர். கம்ம குல மக்கள் ஸ்ரீ ரேணுகா தேவி வாக்குப்படி விவசாயம் செய்வதிலும்,

அவர்களுடைய வம்சம் சத்ரியவம்சம் என்பதால் தொழில் செய்வதிலும், தலைமை பொறுப்பிலிருந்து நிர்வாகம் செய்வதிலும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர். மேலும் தொழிலில் மேன்பட்டு நூற்பாலைகள், பவுண்டரிகள், தொழில்கூடங்கள் பெருகின. மக்களுக்காக பொதுநலத்தில் ஈடுபாடு கொண்டு மருத்துவமனைகள், கல்வி சாலைகள் கல்லூரிகள் ஆகியவற்றை ஏற்படுத்தினர் என்பதில் ஐயமில்லை.

நமது அன்னை ஸ்ரீ ரேணுகாதேவி ராஜவம்சமாகிய க்ஷத்ரியவம்சம் வழி வந்தவர்கள் கம்ம குல மக்கள். இவர்கள் அன்னை வாக்குப்படி ராஜகிரீடத்தையும், பூனூலையும் தவிர்த்து விவசாயத்திலும் தொழில் வளத்திலும் சிறந்து விளங்கினர்.

கோவை மாவட்டம் தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

கோவை தொழில் நகரமாக விளங்குவதற்கு நமது கம்ம குல பெரியோர்களது விடாமுயற்சி, உழைப்பு, சிந்தனை ஆகியற்றின் மூலம் நிலவளம், நீர்வளம், இயந்திரங்கள் கண்டுபிடிப்பு இயந்திரங்கள் உற்பத்தி, பஞ்சாலைகள், நூற்பாலைகள், வார்ப்படத் தொழிற்சாலைகள், இரும்பு சம்பந்தப்பட்ட ஆலைகள் எனத் தோன்றின. மற்றும் பொதுநலத்திற்காக பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், பொதுநல சேவைகள், ஆன்மீக சம்பந்தமாக கோயில்கள் ஏற்படுத்தப்பட்டன.

விஞ்ஞான மேதை **G.D. நாயுடு** அவர்கள் குடும்பத்தார் கலங்கல், (U.M.S.) GD நிறுவனங்கள், **D. பாலசுந்தரநாயுடு,** அவர்கள் குடும்பத்தார், டெக்ஸ்டூல் நிறுவனம், ஆவாரம்பாளையம், திரு. **G. குப்புசாமி நாயுடு** அவர்கள் குடும்பத்தார், பாப்பநாயக்கன்பாளையம், லட்சுமி மில் L.M.W. மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனம், திரு. **P.S. கோவிந்தசாமி நாயுடு** அவர்கள் குடும்பத்தார் பீளமேடு (P.S.G. நிறுவனம்),

நூற்பாலைகள், பவுண்டரிகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனம் மற்றும் மருத்துவமனைகள், திரு. **S.N.R. சின்னசாமி நாயுடு** அவர்கள் குடும்பத்தார், பாப்பநாயக்கன்பாளையம், S.N.R. நிறுவனம், நூற்பாலைகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனம் திரு. **K.K. நாயுடு** அவர்கள் குடும்பத்தார், நூற்பாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்கள், திரு. **L.G. பாலகிருஷ்ணநாயுடு** குடும்பத்தார், (L.G.B. நிறுவனம்), **விஜயமோகன்** சிறுதுளி, **வனிதா மோகன்** குடும்பத்தார் (பிரிக்கால் நிறுவனம்) அன்னூர் **கோவிந்தசாமி நாயுடு** குடும்பத்தார், டாக்டர். **K.G. பக்தவச்சலம்** (K.G. நிறுவனம், கணினி வளாகம்), **வேலுமணி நாயுடு** குடும்பத்தார் CRI நிறுவனம், வையம்பாளையம், திரு. **நாராயணசாமி நாயுடு** விவசாய சங்கத்தில் இருந்து தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்காக அரும்பாடுபட்டு புகழ் பெற்றார். இவர்கள் கோவை முன்னேற்றத்திற்கு முன்னோடிகளாக விளங்குகின்றனர். இதனால் மக்கள் கல்வி, தொழில் ஆகியவற்றில் மேன்பட்டு முன்னேறி செழிப்பாக வாழ்கின்றனர். வாழ வசதி வகுத்த சான்றோர்களுக்கு எங்களது வாழ்த்துக்களை கூறி அவர்கள் குடும்ப நிறுவனங்கள் மேன்மேலும் வளர பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று கம்மகுல மக்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

கம்ம குலத்தினருக்கு இதிகாசங்கள், புராணங்கள், திவ்யப்ரபந்தம் மற்றும் இல்லந்தோறும் திவ்யநாம சங்கீர்த்தனம் ஆகியவற்றில் ஈடுபாடு அதிகமாக இருந்தது. இதனால் புராணங்கள், கதைகள், அடிப்படை தத்துவங்கள் அடங்கிய திருக்குறள்படி குறளோவியமாக வாழ்ந்து வந்தார்கள்.

குடும்பங்களில் செய்யும் சீர்முறைகளை மிகவும் செம்மையாக செய்துவந்தனர். இதனால் குழந்தைகளுக்கு கல்வி, ஒழுக்கம், பெரியோர் கீழ்ப்படிதல், தங்களுடைய திறமையை

மேம்படுத்துதல், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவது போன்றவைகளுக்கு சீர்வரிசைகள் முன்னோடியாக உள்ளன. இதனால் கடவுளின் ஆசீர்வாதமும், பெரியோர்களின் ஆசீர்வாதமும் குழந்தைகளுக்கு கிடைக்கப்பெற்று சிறப்புற வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. சீர்வரிசைகள் ஒவ்வொன்றும் வாழ்க்கையின் அடிப்படைத்துவத்தின் மூலமே நடத்தப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். கம்ம குல பெரியோர்கள் எதையும், காரணமில்லாமல் செய்யவில்லை. எதிர்காலத்தில் குழந்தைகள் நல்ல வண்ணம் வாழவும் இந்த நூல் தொகுப்பு உதவும் என்பதில் நம்பிக்கை உண்டு. இதற்கு உதவிய பெரியோர்களுக்கும், கம்ம குல பெரியோர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

## நலம் பேணுதல்

மனித வாழ்க்கை என்பது இறைவனால் கொடுக்கப்பட்ட இயற்கையான அருள்பெற்ற நன்கொடை ஆகும். கடவுள் நம்மேல் வைத்த கருணைக்கு கோடான கோடி நன்றிகள் சொல்லி தலைவணங்க வேண்டும். இதை மக்கள் உணர்ந்து தனது வாழ்க்கையில் நல்ல முறையில் அன்பும் பண்பும் அறிவாற்றலும் பெற்று நிறைந்த வாழ்க்கையை நல்ல வண்ணம் வாழ வேண்டும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பெரியோர் வாக்கு, நாம் வாழ்வதற்கு நமது உடலை பாதுகாப்பது அவசியம். ஆரோக்கியத்தை கெடுக்கும் குடிப்பழக்கம், புகை பிடித்தல் அறவே தவிர்க்க வேண்டும். உடல் நலக்குறைவு ஏற்படுவது இயற்கை அதை குணமாக்குவதற்கு மருத்துவமனைக்குச் செல்லும்போது நோய்க்குத் தகுந்தபடி நிறைய பொருட்செலவு ஏற்படுகின்றது. இதனால் நாம் பாதிக்கப்படுகிறோம். எனவே வருமுன் காப்போம் என்பதில் நாம் கவனமாக செயல்பட வேண்டும், இன்று கிருமிகள் மூலம் பல வகையான நோய்கள் உருவாகின்றன என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## நீர்வளம் நிலவளம்

தமிழகத்திலுள்ள செழிப்பான கிராமங்களும் அதில் உள்ள கோயில்களின் அமைப்பும், வேலைப்பாடுகளும், நதிகளின் நாகரீகங்களும் நமக்கு பண்பாட்டையும், நாகரீகத்தையும், வாழ்க்கை அமைப்பையும் நுட்பமாக காட்டுகின்றன. மக்கள் தனது பொருளாதாரத்திற்கு விவசாயம் தொழிற்சாலைகள், வாணிபம் ஆகியவற்றையும் கிராமங்களில் வீடுதோறும் உபதொழிலாக கால்நடைகள், கோழி வளர்த்தல், கைவினை பொருட்கள் செய்தல் ஆகியவற்றிலிருந்து வருமானம் கூடுகிறது, பொருளாதாரம் மேம்படுகிறது.

ஒரு காலத்தில் கோயில்களில் கல்விச் சாலைகளாக இருந்தன பின்பு அரசாங்கம் கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் உருவாக்கின. இதனால் கிராமந்தோறும் குழந்தைகளில் மழலைச் சொற்களின் மூலம் வாய்ப்பாடு, பாடல்கள், உரைநடைகள், வீதிகள் தோறும் எதிரொலித்தன. ஆசிரிய பெருமக்களும் தாய் தந்தையரும் பெரியவர்களும் சிறார்களுக்கு உதவியாய் இருந்து, உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்தார்கள். அறிஞர்கள் பெரியவர்கள் இயற்றிய கதை கட்டுரைகள் பாடல்கள் கவிதைகள் மூலம் நமது உள்ளங்களை வசப்படுத்தி கொண்டனர். ஜாதி மத வேறுவாடு இன்றி முன்னோர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு கிராமங்கள் சான்றாக இருந்தன. கிராமத்து மண்வாசனை வளமாக இருந்தது நல்ல சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே பெரியோர்களின் கனவாகும்.

தமிழகத்தில் உள்ள காவிரி, தாமிரபரணி, வைகை, தென்பெண்ணை, பாலாறு மற்றும் துணை நதிகள் சேர்ந்து மாநிலத்தை பசுமை நிறைந்த வளமுள்ள நாடாக செழிக்க செய்கிறது. தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியமாக திகழ்கிறது.

அன்னை பூமியில் குறிஞ்சி என்று அழைக்கப்படும். மேகக் கூட்டம் தவழ்ந்து வரும் மலைகள் மலை சார்ந்த பகுதிகளில்

தேயிலை, காப்பி, மிளகு போன்ற தேவையான மற்றும் தாவர வகைகள் பயிரிடப்படுகிறது.

முல்லை என சொல்லப்படும் அடர்ந்த காடுகளில் சிற்றோடைகள், அருவிகள் செல்கின்றன. மூங்கில்கள் மற்றும் பலவகையான மரங்கள், கொடிகள் படர்ந்தும், மூலிகை செடிகள் நிறைந்தும், மணம் கமழும் தேக்கு, சந்தனம், சால் கருங்காலி போன்ற மர வகைகள் ஓங்கி வளர்ந்து காணப்படுகிறது. காடுசார்ந்த இடங்களில் கால் நடைகள் வளர்ப்பதற்கு வாய்ப்பாக இந்நிலம் உள்ளது.

மருதம் என்ற பெயர் உடைய நன்செய் நிலங்களில் நெல் கரும்பு, வாழை, மஞ்சள், புகையிலை மற்றும் வெற்றிலை, காய்கறி கனிவகைகள், பயிரிடப்பட்டு உள்ளன. புன்செய்நிலங்களில் பருத்தி, ராகி, சோளம் மற்றும் தானிய வகைகள், எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படுகின்றன. மக்கள் விவசாயத் தொழில்வளத்துடன் வாழ்கின்றனர். நெய்தல் நிலமான கடல் சார்ந்த இடங்களில் மக்கள் மீன்பிடித்தல், முத்தெடுத்தல், கப்பல் போக்குவரத்து ஆகிய தொழில்கள் சிறக்க வாழ்கின்றனர். பாலை நிலங்களில் மக்கள் வீரதீர செயல்களுக்கான இடமாக திகழ்கிறது. இவ்வாறு எல்லா வளங்களோடு தமிழகம் பெருவளமாக திகழ்கிறது.

பக்தி வளமாக தமிழ்நாட்டில் தஞ்சை, கும்பகோணம், திருச்சி, மதுரை, காஞ்சி ஆகிய ஊர்களில் சைவ, வைணவக் கோயில்கள் ஏராளமாக உள்ளன. பேரரசர்களாலும், முன்னோர்களாலும் உருவாக்கப்பட்ட கோயில்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியம், கல்வெட்டுகள் ஆகியவை பழமை வாய்ந்த அரிய பொக்கிஷங்கள் ஆகும் சைவ வைணவ கோயில்கள் நமக்கு பயன் அளிக்கக்கூடிய பயன் கலைகளும், மனதிற்கு இன்பத்தையும், கண்ணுக்கு குளிர்ச்சியையும் தரக்கூடிய கவின் கலைகளும் நிரம்ப உள்ளன. இதன் மூலம் நம் முன்னோர்களின் பக்தி, அறிவியல்

நுட்பங்கள், பயன்பாடுகள், சீர்கள் ஆகியவை தெளிவாக தெரிகின்றன. அவை நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகின்றன. அவர்கள் எழுதிய இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள் நமக்கு வாழ்க்கைக்கு மிகவும் வழிகாட்டுதலாக இருக்கின்றன.

மாணவச் செல்வங்கள் குழந்தைகள் இதை அறிந்து அதன் வழி நின்று முன்னோர்களுடைய பாதையில் சென்று நவீன யுகத்தில் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு விஞ்ஞான அறிவியல் யுகத்தில் நல்லவை எற்று தீயன விலக்கி உலகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே பெரியோர்களின் எண்ணமாகும். பெரியோர்களின் எண்ணப்படி நடந்து வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும்.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டுடைய யார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

அவர்களுக்கு பூமாலை பாமாலை சூட்டி இசைபாடி பொற் பாதங்களை வணங்குகிறோம். கடவுளின் ஆசீர்வாதத்தாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் யோகம் பெற்று கர்மயோகத்தால் ராஜயோகம்பெற்று பெருவளமாக பல்லாண்டு வாழ வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு
**R. செல்வராஜ்**

# நன்றியுரை



இந்நூல் தொகுப்பிற்கு உதவியாய் இருந்த

திருமதி. **மைதிலி விஜியானந்தன்**

M.Com., M.Phil., MBA., PGSCA, (PhD) - Assistant Professor

அவர்களுக்கு நன்றி

இந்த நூல் தொகுப்பதற்கு உதவியாய் இருந்த திருமதி. **கௌசல்யா நடராஜன்** M.A., B.Ed., திருமதி. **ராமலட்சுமி குணசீலன்,** திரு. **குணசீலன்** மற்றும் ஓவியம் வரைந்து கொடுத்த செல்வி. **ராகவி** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

**R. செல்வராஜ்**

## அணிந்துரை



**Dr. R. சித்ரா** MBA., MCA., Ph.D.,
Deputy General Manager (Retd) TNEB,
CEO / Naveen Spinner & Deliving RD

கம்மவார் இனத்தின் வரலாற்றுடன் அவர்கள் வழிபாட்டு முறைகளும், வாழ்க்கை கம்மவார் சமூகத்தைச் சேர்ந்த சென்ற தலைமுறையினர் நமது வழிபாடு மற்றும் சீர்முறைகளைக் கடைபிடித்து மாண்புடன் வாழ்ந்தனர். இனி வரும் தலைமுறையினர் நமது நெறிமுறைகளை தெரிந்துகொள்ள திரு. செல்வராஜ் அவர்கள் தொகுத்து நேர்த்தியாக எழுதியிருக்கிறார்.

கம்மகுல முன்னோர்கள் சீரினையும், சடங்கையும் வழிகாட்டும் நெறிகளாகவே கடைபிடித்தனர் என்ற நுலாசிரியரின் ஆணித்தரமான கருத்திற்கு நமது பாராட்டுதலை தெரிவிக்கிறோம். இந்நூலில் கௌரி விரதம் என மேலோட்டமாக கூறாமல் ஆழ்ந்து செதுக்கியிருக்கிறார்.

இன்றைய இளைஞர்கள் கால ஓட்டத்தில் தங்கள் வாழ்க்கையை ஒரு பந்தயமாகவே நினைத்து ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மேடை போட்டு புத்திமதி சொல்வதை

அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் அணுகுண்டுகளை போல ஏகப்பட்ட சக்தியை உள்ளடக்கியிருப்பவர்கள். அவர்களுக்கு நம் பாரம்பரியத்தின் உட்பொருளையும், அது சிதையாமல் இருக்க பின்பற்ற வேண்டிய வழிபாட்டு முறைகளையும், வாழ்வியல் நெறிகளையும் கொண்டு செல்ல வேண்டியது நம் கடமையாகிறது. சுவாமி விவேகானந்தர், இந்த உலகை மாற்றியமைக்க நூறு இளைஞர்களைத் தாருங்கள் என்றுதான் கேட்டார். இன்றைய இளைய சமூதாயத்திற்கு, நமது முன்னோர்கள் வழிபாட்டு முறைகளை அறிமுகம் செய்வதில் இந்நூல் முக்கிய பங்குவகிக்கிறது. இவரது படைப்புத்திறன் மேன்மேலும் வளரவும் பயன்தரக்கூடிய படைப்புகளாக பரிணமிக்கவும் வாழ்த்துகிறேன்.

**Dr. R. சித்ரா**

# அணிந்துரை



அன்பார்ந்த கம்மகுல சொந்தங்களுக்கு எமது பணிவான வணக்கங்கள் கணபதி, மணியகாரன்பாளையம் ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கம்மாள் திருக்கோவில் சார்பாக நம்புரார் திரு. செல்வராஜ் (எ) ரங்கநாதன் அவர்களால் அழகாக தொகுத்து வெளியிட்டுள்ள இந்நூல் கம்மகுலத்தின் அதிதேவதை ஜலதுர்காதேவி ஸ்ரீ ரேணுகா தேவி மற்றும் அவரது மகள் கௌரியம்மன் ஆகிய இருவரது சரித்திரமும் எளிமையாகவும், சுருக்கமாகவும் அழகான சித்திரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் நமது சந்ததியினர் கம்மகுல பண்பாடு, பாரம்பரியம் மற்றும் சீர்முறைகளின் தாத்பர்யங்களை அறிந்துகொள்ள பேருதவியாக இருக்குமென நம்புகிறேன். மேலும் ஆழ்வார் பாசுரங்கள் உரிய சித்திரங்களுடன் தொகுக்கப்பட்ட இந்நூலை பெரியவர்களும், குழந்தைகளும் ஆர்வத்துடன் படிக்கவும், பாராயணம் செய்யவும் பயன் உள்ளதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

என்றும் அன்புடன் வணக்கத்துடன்

**V.G. விஜயசேகர்**

மணியகாரன்பாளையம்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கம்ம குலத்தின் ஸ்ரீ கௌரி விரதம் | .... | 01 |
| 2. | ஸ்ரீ ரேணுகாதேவி அவதாரம் | .... | 6 |
| 3. | கௌரி விரத பூஜை அனுஷ்டிக்கும் முறை | .... | 27 |
| 4. | ஸ்ரீ கௌரி கதை | .... | 29 |
| 5. | உத்தாபின சீர் நிறைவேறியமை | .... | 34 |
| 6. | ஆழ்வார்களின் அழகோவிய பாசுரங்கள் | .... | 35 |
| 7. | திருப்பள்ளியெழுச்சி தனியன்கள் | .... | 38 |
| 8. | திருப்பாவை தனியன்கள் | .... | 45 |
| 9. | தென்கலை | .... | 61 |
| 10. | வடகலை | .... | 63 |
| 11. | தியாகராஜர் கீர்த்தனை | .... | 69 |
| 12. | விளம்பரங்கள் | .... | 72 |

# கம்ம குலத்தின் ஸ்ரீ கௌரி விரதம்
# உத்தாபின சாங்கியம் - தத்தெலு பண்டக
# அசூன்ய சயன விரதம்

## ஸ்ரீ விநாயகர் துதி



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் ஸோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

## ஸ்ரீ ரேணுகா தேவி துதி



ஓரிகண்டி பட்டணமுல ஜூர்ண வீர்ண வனமுல
அல்லி மல்லி இருவாட்சி தாமரலு சம்பங்கி
புஷ்பாலு தேங்காய அரிடி தோபு நடம
ஒக கெஜ நிம்ம மரிகென்னேறு செட்டு
கிந்த கன்ன புட்டலு வெலகின கார்
பொம்ம ரேணுகா நீ பாதமுலு பூஜிதமு
சேசேமு காப்பாட ராவம்மா கருணதோ !!



## கௌரி விரதம்
## உத்தாபின சாங்கியம்-தத்தெலு பண்டக
## அசூன்ய சயன விரதம்

இந்து மதத்திற்கே உரிய சடங்குகளும் தர்மங்களும் மக்களால் இயன்ற வரை கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய கம்மவார் குலம், பெண்மையைப் போற்றிப் பரவிடும் சீர்களையும் சடங்குகளையும் மிகுதியாக கடைபிடித்து வருகின்றது. உறவுகளைக் கட்டிக்காக்கவும், உயர்வுகளைப் பேணிக்காக்கவும் கடைபிடிக்கப்படும் சடங்குகளில் கௌரி விரதம் என்பது கம்மவார் குலத்தின் தலையாய சடங்காகும். பெண்களால் குடும்பம் பெருமை அடைகின்றது. பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் பெண்களால்தான் நற்செயல்கள் நடைபெறுகின்றன.

பொறுமை என்னும் நகை அணிந்து பெருமையைக் கடை பிடித்து வாழ்பவள் பெண். இதனை நன்கு உணர்ந்தவர்கள் கம்மவார் குலத்தினர். எனவே தான் உலகெங்கும் பரவிநின்று உயிர்களுக்கு உற்ற துணையாய் இருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தந்து அருளும் அன்னை பராசக்தியின் வடிவமாய் விளங்குகின்ற ரேணுகாதேவியை தமது குலத்தின் முழு முதற்கடவுளாக வணங்கி வருகின்றனர். கம்ம குலத்தார் தத்தம் குலத்தில் பிறந்த கற்பும் உயர் பண்புகளும், தெய்வீகத்தன்மையும் பொருந்திய பெண்மணிகளை குலதேவதைகளாகக் கொண்டு நெடுங்காலமாக வணங்கி வருகின்றனர்.

### கம்மவார் என்ற பெயர் வரக் காரணம்

நாட்டில் அதர்மம் தழைத்து நீதி நேர்மை அழிந்து வரும் காலத்தில் தர்மத்தை நிலைநாட்ட தர்மம் தவறாத அரசர்கள் தேவைப்பட்டனர். அதற்காக காமாதிக முனிவர் மகாலட்சுமியை வேண்டி தவமிருந்து பெற்ற மகாலட்சுமியின் கம்மலை வைத்து பக்தியோடு வணங்கி வந்தார். அந்த கம்மலில் இருந்து சர்வ சக்தியோடு, சத்தியம், தர்மம், நீதி தவறாத சத்ரிய அரசர்கள் பிறந்தனர். மகாலட்சுமியின் கம்மலில் இருந்து அவதரித்த அரசர்கள் கம்மவார் என அழைக்கப்பட்டனர்.




அக்காலத்தில் அரச குலத்தினர் அனைவரும் ரேணுகாதேவி-ஜமதக்கினி முனிவரின் புதல்வனாகிய பரசுராமரின் கோபத்திற்கு ஆளாயினர். (தந்தை ஜமதக்கினி முனிவரை கொன்ற அரச வம்சத்தினரை 21 தலைமுறை அழிப்பேன் என்பது பரசுராமனின் சபதம்) தன்மகன் பரசுராமனின் கோபத்திலிருந்து, கம்மவார் குலத்தைக் காப்பாற்றியவள் அன்னை ரேணுகாதேவி. கம்மவார் சத்ரியர்களாக (அரசர்களாக) நீடித்தால் பரசுராமனால் ஆபத்து என்பதை உணர்ந்த ரேணுகா தேவி கம்மகுலத்தவர்களை பூணூல், கீரிடம் ஆகியவற்றையும் அரசு பதவியையும் துறக்குமாறு செய்து தலைக்கு உருமாலைகளைக் கட்டி விவசாயிகளாக மாற்றினாள். அன்று முதல் கம்மகுலத்தவர் விவசாயத்தையே தன் முதன்மைத் தொழிலாகக் கொண்டனர்.



ரேணுகாதேவி கம்மகுலத்தை அழிவினின்று காத்ததோடு மட்டுமின்றி சகல நன்மை-களையும் அருளினாள். அவள் அருளால் கம்மகுலம் தழைத் தோங்கியது.

## ஜமதக்னி முனிவர் ஜனனம்



மகுலதேசத்தில் மாவுறகிரி என்ற பட்டிணம் இருந்தது. அங்கு வாழ்ந்த பிருகு முனிவருக்கு ருசிகர் என்ற பெயர் உடைய மகன் இருந்தார். ருசிகர் ஆழ்ந்த பக்தியும், தவ வலிமையும், உடையவர். அவருக்கு பெரியோர்கள் திருமணம் செய்ய நினைத்தனர். விஸ்வாமித்திரர், விஸ்வகிருத், விஸ்வஸித்து ஆகியோர்கள்

குடும்பத்தில் உடன் பிறந்த சகோதிரியான சத்தியவதியை ருசிகருக்குப் பெரியோர்கள் திருமணம் செய்து வைத்தனர். நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைகள், மனுதர்ம சாஸ்திரம் எல்லாவற்றையும் கற்று அறிந்த ருசிகர முனி தம்பதிகளுக்கு குழந்தைச்செல்வம் கிட்டவில்லை, நாரதரை தவமிருந்து வணங்கினர்.



நாரதர் தோன்றி நல்வழிகளைக் காட்டுவார் என நினைத்து தினந்தோறும் வணங்கித் தவமிருந்தனர். இவ்வாறு ருசிக முனிவர் தவம் இருந்த போது மனம் மகிழ்ந்து ருசிகசத்தியவதி தம்பதிகளுக்கு நாரதமுனிவர் காட்சி தந்தார். அவரை ஆசனத்தில் அமரச்செய்து உபசாரம் செய்தார்கள் - ருசிகமுனிவரும், சத்யவதியும் நாரதரை வணங்கி நின்றனர். நாரதர் அவர்களைப் பார்த்து நலம் விசாரித்து ஏதேனும் குறை உள்ளதா? என வினவினார்.

அதற்கு ருசிகமுனிவர் ஸ்வாமி, இங்கு மும்மாரி பெய்து நீர்வளம், நிலவளம் பெருகி, இல்லை என்ற சொல்லுக்கு இடம் இல்லாமல், எல்லோரும் நலத்துடனும், வளத்துடனும், குறை இல்லாமல் இருக்கின்றனர். ஆனால் எங்களுக்கு எங்கள் குலம் வளர நாட்டை ஆள்வதற்கு ஒரு குழந்தை இல்லை எனவே எங்கள் குறைகளை அறிந்து அதற்குப்பரிகாரம் சொல்லுங்கள் எனக் கூறினார். நாரத முனிவர் உங்களுக்குப் பூர்வ ஜென்ம பாவ பலன்கள் உள்ளன அவை தீருவதற்கு ஓர் உபாயம் சொல்கிறேன். நீங்கள் இந்தப் பட்டணத்தில் உள்ள பெரிய ஆலமரத்தில் ஒரு கிளையை வெட்டி அதில் கலப்பை செய்து விவசாயம் செய்து அதில் வரும் கதிர்களை அறுத்து அமுது தயாரிக்க வேண்டும், அதை சிவ பக்தர்களுக்கு வினியோகம் செய்தால் புத்திர பாக்கியம் பெறுவீர்கள் எனக்கூறிச் சென்றார்.

ருசிக முனிவர் நாரதர் சொன்ன குறிப்பை மறந்து புத்திரபாக்கியம் பெற ஆலமரத்தின் கிளையை வெட்டாமல் அடி மரத்தை வெட்டினார். மரம் அடியோடு வீழ்ந்தது. அந்த மரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பல பறவைகள் சிக்கி மடிந்தன. தப்பிய

பட்சிகள் பட்சிராஜனாகிய கருடனிடம் முறையிட்டன, கருடன் தேவேந்திரனிடம் முறையிட்டார். நாரத மகாமுனிவர் தேவேந்திரனிடம் 'நான் சொன்ன குறிப்பில் ஆலமரத்தின் கிளையை வெட்டாமல் மரத்தை வெட்டியதால் இந்த நிலை ஏற்பட்டது. ருசிக தம்பதிகளை மன்னிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். கருடன் முறையிட்டதையும் நாரதர் வேண்டியதையும் கேட்ட தேவேந்திரன் ருசிகர் இந்த பட்சிகளைக் கொன்றதால், அவர் செய்யும் யாகம் பயனில்லாமல் போகட்டும் என்று கூறினார். மேலும் அவர் நந்திபகவானின் மூலம் பயிர்களை அழிக்க பசுக்களை பூலோகம் அனுப்பினார். ருசிகர் ஆல மரக்கிளையில் கலப்பை செய்து விவசாயம் செய்தார். பயிர்கள் வளர்ந்து கதிர்மணிகள் குலுங்கி நின்றன. கதிர்களை மாடுகள் மேய்ந்தன. அந்த பசுக்களை சித்ரவதை செய்ததாலும், ஆலமரத்தை வெட்டியதால் அதில் இருந்த பறவை இனங்கள் அழிந்ததாலும், இந்தப் பாவங்கள் மறுபடியும் ருசிகரைப் பற்றிக் கொண்டன. கருட பகவான், தேவேந்திரன், நந்தி பகவான் ஆகியோர் சாபத்தால் ருசிகமுனிவர் குழந்தைக்காக செய்த தவம் பயன் இல்லாமல் போயிற்று. சிவபக்தர்களுக்குச் செய்த உணவும் வருண பகவனால் காற்றிலும், மழையிலும் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் சத்யவதி மனம் வருந்தினாள்.

பிறகு சத்யவதி மறுபடியும் பசுக்களுக்கும், பட்சிகளுக்கும் உணவு அளித்து பல பூஜைகள் செய்தும், யாகம் செய்தும், தோஷப் பரிகாரம் செய்து கொண்டாள். இதன் பலனாகப் பாவ விமோசனம் பெற்று சத்யவதியின் பதிவிரத தர்மத்தாலும் சில மாதங்களில் கர்ப்பம் தரித்தாள். சத்யவதி உத்தராயண புண்ய காலத்தில் மீனசம்ச்சரம் சோமவாரம் பதினான்கு நொடி வேளைக்கு சிவாம்சத்தில் ரௌத்ராம்சம் பொருந்திய ஆண் குழந்தையைப் பெற்றாள்.



நாரதர் அக்குழத்தைக்கு 'ஜமதக்னி' என்று நாமகரணம் செய்தார். இக்குழந்தை மகா தபசியாகவும், அஷ்ட மாசித்திகளைப் பெற்றவனாகவும் விளங்கும் என்று வாழ்த்தினார்.


ஜமதக்கினி ஐந்து வயது நிரம்பிய பின் பெற்றோர்கள் தடுத்தும், தாய் தந்தை பேச்சை ஏற்காமல் ரிஷிகேஷ பர்வதத்தில் சூர்ய மகாமுனி ஆசிரமத்தில் சகல கலைகளையும் கற்று அங்கேயே தவம் செய்யலானர். நாரத முனிவர் ருசிக முனிவர் சத்யவதி தம்பதியினரிடம்'உன் மகன் ஜமதக்கினி முனிவர் ஜகத்துக்கெல்லாம் மீறிய தவ வலிமை பொருந்தியவராய் விளங்குவார்' எனக் கூறினார். சத்தியவதி மீண்டும் கர்ப்பம் தரித்தாள். ஒரு பெண் குழந்தையைப் பெற்று எடுத்தாள். அக்குழந்தைக்கு 'தரிதேவி' என்று நாமம் சூட்டினார்கள். ஜமதக்கினி முனிவர் தவம் புரிந்து பரமேஸ்வரனிடம் இருந்து உக்ர சக்தி, காமதேனு, கற்பக விருட்சம், ஆகிய வரங்களைப் பெற்று மகிழ்ந்தார். தான் நினைத்தவுடன் வரவேண்டும் என ஜமதக்னி முனிவர் வரம் பெற்றதால் கற்பக விருட்சமும், காமதேனுவும் வந்து போயின. இவ்வாறாக ஜமதக்னிமுனிவர் தன் பர்வதத்தில் தவம் மேற் கொண்டிருந்தார். தந்தையான ருசிக முனிவர் ஜமதக்னி முனிவருக்கு நல்ல பதிவிரதை மனைவியாக அமைய வேண்டும் என சிவபெருமானை நினைத்து தவம் இருந்தார்.



## ஸ்ரீ ரேணுகா தேவி அவதாரம்

கர்ம ராஷ்டிரம் இன்று மகாராஷ்டிரம் என்று விளங்கக்கூடிய அந்த மகாராஷ்டிர தேசத்தில் ஓர்கண்டி என்ற ஒரு பட்டிணம் உண்டு. ரேணு மகாராஜா தன் மனைவி சுகுணசுந்தரியுடன் சத்தியம், நீதி, தருமம், தவறாமல் அந்தப் பட்டிணத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். ரேணு மகாராஜா அனுதினமும் மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீமந் நாரயணனையே பூஜித்து வந்தார்.

## மக்கட்பேறு



ரேணு மகாராஜாவுக்கு மக்கட்பேறு இல்லாததால் மனதில் வேதனையும் வருத்தமும் அடைந்தார். பல ஆண்டுகள் ஆகியும் குழந்தைப்பேறு உண்டாகவில்லை.

ஒரு நாள் ராஜசபையில் குலகுருவான வசிஷ்டரை வணங்கி ஓ சுவாமி நான் ஆண்டு வரும் இந்த நாட்டில் எல்லா மக்களும் மனமகிழ்ச்சியோடு வாழ்கின்றனர். ஆனால் எனக்குப் பிறகு இந்த நாட்டை ஆள என்குலம் தழைக்க ஒரு குழந்தை இல்லையே! எனவே நான் இப்பொழுதே. இந்த ராஜ பரி பாலனங்களைத் துறந்து தபோ வேடம் பூண்டு காட்டிற்குச் சென்று மகா விஷ்ணுவாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை நோக்கி தவம் புரியப்போகிறேன் அவர் பிரசன்னமாகி எனக்கு வரம் தந்தால் மீண்டும் இந்த நாட்டை வந்து ஆள்வேன் இல்லாவிட்டால் அங்கேயே. மடிவேன் என்று கூறிவிட்டுக் காட்டிற்குப் புறப்பட்டார்'.



இமயமலைச் சாரலில் கங்காநதி தீர்த்தத்தில் மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீமத் நாராயணனை நினைத்துப் பல ஆண்டுகள் கடும் தவம் புரிந்தார்.






தேவேந்திரன், ரேணு மஹாராவை சோதிக்க விரும்பி இவர் தவத்தைக் கலைக்க மேனகா, ஊர்வசி, திலோத்தமை போன்ற தேவ கன்னிகைகளை அனுப்பி வைத்தார். அவர்களும்

ருசிகரமான கீதங்களுடன் ஆடல் பாடல்கள் நிகழ்த்தி ரேணு மகாராஜாவின் தவத்தைக் கலைக்க முற்பட்டனர். ஆனால் தோல்வி அடைந்தனர்.



தேவேந்திரன் தவத்தைக் கலைத்தே தீருவேன் என்று வாயுவையும், வருணனையும் அனுப்பி வைத்தார். அவர்களும் காற்று, மழை, மின்னல்களை ஏற்படுத்தினர். ஆனால் இவை அனைத்தும் ரேணு மகாராஜாவின் தவத்தைக் கலைக்க வில்லை. பின்னர் கடுங்கோபம் கொண்ட இந்திரன் அக்னி பகவானை அனுப்பினார்.



அக்னி பகவானாலும் ஒன்று செய்ய முடியவில்லை. ரேணு மகாராஜாவினுடைய தவம் பூர்த்தியாகி அவருடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்து 'ஓம் நமோ நாராயணயாய' என்ற சப்தத்தோடு வைகுந்தம் வந்து சேர்ந்தது. ரேணு மகாராஜனுடைய கடுந்தவத்திற்கு மகிழ்ந்த ஸ்ரீமத் நராயணன் மீண்டும் அந்த உயிரை அரசனின் உடலுக்கே அனுப்பினார்.



ரேணு மகாராஜனின் முன்னால் மகாவிஷ்ணு தோன்றி ஆதி மகாசக்தியாகிய ஜலதுர்க்காவை மகாவிஷ்ணு மனமுருகி பிரார்த்தித்தார். ரேணு மகாராஜா தவம் செய்யும் இடத்தில் வடதிசையில் ஜலக்கண்ணானது பெருகியது. பாதாளத்திலிருந்து மலர்ந்த அழகிய தாமரை மலரும் நீருடன் வெளி வந்தது. அந்தத்

தாமரை மலரில் அப்பொழுது பிறந்த பெண் குழந்தை தோற்றம் அளித்து அழுதது. குழந்தையின் அழுகுரல் கேட்டு ரேணு மகாராஜா கண் திறந்து பார்த்தார். மகாவிஷ்ணு, 'ரேணு மகாராஜா உன் தவத்திற்கு மனம் மகிழ்ந்தேன். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாகிய ஜலதுர்க்காவே உனக்கு மகளாக அவதரித்துள்ளாள்' என்று சொல்லி வாழ்த்தினர் . அங்கிருந்த முனிவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்து உன் கடுந்தவத்தின் பயனாகக் கிடைத்த ஆதி மகாசக்தியாகிய இக்குழந்தைக்கு 'ரேணுகாதேவி என்று நாமம் சூட்டினர். சந்திர சூரியர்கள், பூமி, ஆகாசம் உள்ளவரை உன் பெயர் நிலைத்திருக்கும் என்று ஆசிர்வதித்தனர். ரேணுமகாராஜா குழந்தையுடன் வசிஷ்டர் ஆசீர்வாதத்துடன் அரண்மனைக்கு திரும்பி வந்து ராஜ பரிபாலனம் ஏற்று நடத்தினார். குழந்தை நல்ல முறையில் வளர்ந்தது. அரண்மனையில் ரேணுகாதேவி சீரும் சிறப்புமாக எல்லாக் கலைகளும் கற்று வளர்ந்து தன் தோழிகளுடன் விளையாடி மகிழ்ந்தாள். அரண்மனையில் ரேணுமகாராஜாவின் மந்திரிசபையில் உள்ள மந்திரியின் பெயர் இப்ரசேன சித்தன் என்பது ஆகும். அவர் தனது தோட்டத்தில் ஏர் உழுத போது ஒரு பெண் குழந்தை கிடைத்தது. அந்த பெண் குழந்தை பரமேஸ்வரர் அனுகிரகத்தால் கிடைத்தது. அதனால் அந்த பெண் குழந்தைக்கு சாமுண்டி பரமேஸ்வரி என பெயரிட்டு அழைத்தனர். ரேணுகாதேவியும் சாமுண்டி பரமேஸ்வரியும் உற்ற தோழிகள் ஆவார்கள், இவர்கள் மற்ற தோழிகளுடன் நந்தவனத்தில் விளையாடி மகிழ்ந்தனர்.

வசிஷ்டர் ஆசிரமத்தில் ஸ்ரீரேணுகாதேவியும், சாமுண்டிபரமேஸ்வரியும் வேதங்கள், ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய அனைத்தையும் பூரணமாகக் கற்றுணர்ந்தனர்.

## ஸ்ரீ ரேணுகாதேவி திருமணம்

ருசிக முனிவர் பதிவிரதையான சத்யவதியின் மகன் ஜமதக்னி, ஐந்து வயதிலேயே தன் தந்தையிடம் தான் ரிஷிகேச பர்வதத்தில் சூர்ய மகாமுனி ஆசிரமத்தில் சகல கலைகளை கற்றுத்தவம் செய்கிறேன் என்று சொல்லி சென்றார். சில

ஆண்டுகளுக்கு பிறகு ருசிகமுனிவர் தன் மகனுக்குத் திருமணம் செய்ய எண்ணினார். அதே சமயம் ஸ்ரீரேணு மகாராஜா தன் மகள் ஸ்ரீ ரேணுகாதேவிக்கும் மணம் செய்ய நினைத்தார். அவர் அரசவையில் 'ஐம்பத்தாறு தேசம் எங்கும் சுயம்வரம் சாற்றி, ஐம்பத்தாறு தேச ராஜ குமாரர்களில் யாரைப் பிடிக்குமோ அவருக்கு ரேணுகா தேவியை மணம் செய்வேன்' என்று கூறினார்.



மந்திரிகுமாரியான சாமுண்டேஸ்வரி அரசரை வணங்கி 'மகாராஜா, ஐம்பத்தாறு தேசம் சுயம்வரம் சாற்றி இராஜகுமாரி ரேணுகாதேவிக்குத் திருமணம் செய்தால் தேவியின் சக்தி, வீரம், பராக்கிரமம் போன்றவை யாருக்கும் தெரியாமல் போய்விடும் அதனால் நானும் ராஜகுமாரியும் சகல பரிவாரங்களுடன் ஐம்பத்தாறு தேசத்து அரசர்கள் மீது திக்விஜயம் செய்து வருகிறோம் என்றாள். இதற்கு அனைவரும் சம்மதித்தனர்.

ஸ்ரீ ரேணுகாதேவியின் சகோதரரான போத்ராஜ் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார். ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் ரேணுகாதேவி, சாமுண்டீபரமேஸ்வரி என்ற பெயர் கேட்டவுடன் நடுநடுங்கி பாதங்களிலே சரண் அடைந்தார்கள். தன் நாட்டிற்குத் திரும்பி வரும் வழியில் ஒரு அழகான பர்வதத்தைக் கண்டனர்.



அதில் தாமரைத் தடாகங்கள், நீரோடைகள், மனோரஞ்சிதமான புஷ்பங்கள் ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்து தங்கினர். நீரோடையில் இருவரும் குளித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ரேணுகாதேவி படைகளான

யானைகள், குதிரைகள் அங்கு விடுவிக்கப்பட்டிருந்தன. அவை அங்குள்ள முனிவர்களுடைய ஆசிரமங்களையும், குடில்களையும் பிடுங்கி நாசம் செய்தன. அதைக் கண்ட முனிகுமாரர்கள் அவைகளை விரட்டி அடித்தனர். இதைப் பார்த்த ரேணுகாதேவியும், சாமுண்டீபரமேஸ்வரியும் அந்த முனி குமாரர்களுடன் யுத்தம் செய்தனர். முனிகுமாரர்கள் மூர்ச்சை அடைந்து வீழ்ந்தனர். அங்குள்ள பிரஜைகள் அங்கு நடந்ததை ஜமதக்னி முனிவரிடம் தெரிவித்தனர். அவர் தீர்த்தத்தை மந்திரித்து கொடுத்து அனுப்பினார்.

அந்தத் தீர்த்தத்தைத் தெளித்தவுடன் முனிகுமாரர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்து மீண்டும் போரிட்டனர். இதைக் கண்டு வியந்த ஸ்ரீரேணுகாதேவியும் சாமுண்டீபரமேஸ்வரியும் அவர்களுடைய குருவைப் பற்றிக் கேட்டனர். முனி குமாரர்கள் தம் குரு ஜமதக்னிமுனியைப் பற்றி கூறியதும் வியந்து இவர்களே இவ்வளவு சிறந்த திறமை உள்ளவர்கள் என்றால் அவர்களுடைய குரு ஜமதக்னி முனிவர் எவ்வளவு சக்தி வல்லமை உடையவராக இருக்க வேண்டும். இவரே எனக்குக் கணவர் என்று மனதில் நினைத்தாள் ஸ்ரீரேணுகாதேவி. அதை தன் தந்தையான ரேணுமகாராஜாவிடம் கூறினாள். ரேணுமகாராஜா, மந்திரி இப்ரசேன சித்தனிடம் ஓலை எழுதி ருசிக முனிவருக்கு அனுப்பினார். ருசிகமுனிவர் ஓலையைப் படித்துப் பார்த்து நாமோ பிரம்மகுலம் அவர்களோ சத்திரியர்கள்' என்று யோசனை செய்தார். இவ்வேளையில் நாரத முனிவர் உன் மகள் ஜமதக்னி முனிவருக்கு ஏற்ற பதிவிரதை ஸ்ரீ ரேணுகாதேவியே ஆகையால் திருமணத்திற்குச் சம்மதம் என்று இப்ரசேனசித்தனிடம் கூறு என்றார். ஆனால் ஜமதக்னி முனிவர் முதலில் என் தங்கைக்கு மணம் முடியுங்கள் பிறகு என்னுயை சம்மதத்தைத் தெரிவிக்கிறேன் என்றார்.

## நாகசித்தம செட்டு ஜனனம்


மண்டிவாடி என்ற பட்டணத்தில் சங்கராச்சாரி என்பவரும் அவர் மனைவி சாவித்திரிதேவியும் பெரும் செல்வத்துடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. அவர்கள் ஒரு மல்லிகை வனத்தை உண்டாக்கி அதில் சிவலிங்கத்தைப்

பிரதிஷ்டை செய்து தினம் தவறாமல் பூஜை நடத்தி வந்தார்கள். இதனால் மல்லிகா பரமேஸ்வரன் என்ற பெயர் சிவலிங்கத்திற்கு ஏற்பட்டது. தம்பதியினர் தான தருமங்கள், பூஜை யாகங்கள் செய்வதைப் பார்த்து கையிலையில் பார்வதி பரமேஸ்வரன் மனமகிழ்ந்தனர். ஒவ்வொரு நாளும் பசுமாடுகளை சங்கராச்சியாரியும், சாவித்திரிதேவியும் ஓட்டிச் சென்று மலை அடிவாரத்தில் மேய்த்து வந்து பாலைக் கறந்து அவ்வூரில் உள்ள குழந்தைகளுக்குப் பால் ஊற்றுவார்கள்.




கைலாயத்தில் சிவபெருமானும் பார்வதியும் சந்தோசமாக இருக்கும்போது பார்வதி பரமேஸ்வரிடம் நாம் பூலோகத்திற்குச் சென்று அங்குள்ள அழகான பர்வதங்களைக்கண்டு ரசித்து வரலாம் என்று கூறினார். சிவன், தேவியிடம் பூலோகம் காமம், குரோதம் போன்ற கெட்ட குணங்களைக் கொண்டதுடன் பலவிதமான பாபங்களையும் உடையது. ஆதனால் அது வேண்டாம் என்று கூறினார். இதைக்கேட்ட பார்வதி வருத்தம் அடைந்தார். அதைப்பார்த்த சிவன் உன் இஷ்டம் எனக் கூறி இருவரும் மல்லிகை வன பர்வதத்திற்கு வந்தனர். அங்கு சங்கராச்சியாரும் சாவித்திரி தேவியும் பூஜை செய்வதைப்பார்த்து மனம் மகிழ்ந்தனர். சிவனும் பார்வதியும் மனோ ரம்யமான பல அழகிய காட்சிகளைக் கண்டு மன மகிழ்ச்சியுடன் அவ்வனத்தைச் சுற்றி வந்தார்கள். அப்பொழுது பட்சிகள் சந்தோஷமாக இருப்பதைக்கண்டு ஈஸ்வரி சிவனிடம் நாமும் பட்சிகளாக மாறி ஆனந்தமாக இருக்கலாம் என்று கூறினார். சிவனும் சக்தியும் இச்சாதாபமாகி மனம் மகிழ அங்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சிவபிரான் தன்னிடம் இருந்த சர்ப்பத்தை குழந்தைக்கு காவலாக இருக்கச் செய்தார். 'நாகேந்திரா இந்த குழந்தையை எந்தத்தீங்கும் ஏற்படாத வாறு பாதுகாத்து இந்த பர்வதத்தில்

என்னைப் பூஜிக்கும் பக்தர்களாகிய சங்கராச்சாரியும் சாவித்திரிதேவியும் இவ்விடம் வந்தால் இந்தக் குழந்தையை விட்டுவிட்டு நீ நம்மிடம் வந்து விட வேண்டும்' என்று சிவபெருமான் நாக ஸர்ப்பத்திடம் கூறி மறைந்தார். அந்த நாக ஸர்ப்பம் அக்குழந்தையைப் பாதுகாத்து வந்தது குழந்தை பசியால் அழ பராசக்தியே அங்கு வந்து ஞானப்பால் கொடுத்துச் செல்வார். மறுநாள் காலையில் மாடுகளை மேய்ப்பதற்கு சங்கராச்சாரியார் வனத்திற்கு வந்த போது குழந்தை அழுகிற சப்தம் கேட்டது. அங்கு போய் பார்த்த போது நாகஸர்ப்பம் வட்டமிட்டு படமெடுத்து படுத்திருப்பதைப் பார்த்தார்.



சங்கராச்சாரி நாக சர்ப்பத்தை வணங்கி 'நாகராஜா தினந்தோறும் தவறாமல் சிவபெருமானை வழிபட்டு பூஜிப்பது உண்மையானால் இப்பொழுதே இந்தக் குழந்தையை விட்டு அப்புறம் செல்ல வேண்டும்' என்று வேண்டி நின்றார். சர்ப்பம் மறைந்தது. இவர் அக்குழந்தையை எடுத்து மகிழ்ந்து வீட்டிற்குக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார். மனைவிடம் நடந்ததைக்கூறினார். நாகராஜனின் துணையோடு கிடைத்த இக்குழந்தைக்கு 'ஆதி நாக சித்தம செட்டு' என்று இருவரும் பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

## தரிதேவி திருமணம்



ஆதி நாக சித்தம செட்டு கல்வி கேள்விகளில் சிறந்து திருமண

வயதை அடைந்தவுடன், ஆதி நாக சித்தம செட்டுவுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று சங்கராச்சாரியும் சாவித்திரி தேவியும் ஆலோசனை செய்து கொண்டு இருந்த பொழுது நாரத முனிவர் அங்கு வந்தார் அவருக்குப் பாதபூஜை செய்து வணங்கி வரவேற்றனர். நாரதர் அவர்களை வாழ்த்தி உங்கள் மகனாகிய ஆதி நாக சித்தம செட்டுவுக்குத் தகுந்த மனைவி மாவுறகிரி பட்டிணத்தில் ருசிக மகா முனிவருடைய புதல்வி ஆவாள். அவள் ஜமதக்னி முனிவருடைய ஓரே தங்கை தரிதேவி ஆவாள். அவள் எல்லா லட்சணங்களும் பொருந்தியவள் நீங்கள் அங்கு சென்று பெண் கேளுங்கள் என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

பின்பு நாரதர் மாவுறகிரி பட்டணத்திற்கு ருசிக முனிவரை காண ருசிக முனிவர் ஆசிரமத்திற்கு 'நமோ நாராயணா' என்று சொல்லி நாரதர் வந்தார் அவரைப் பக்தியுடன் உபசரித்து வரவேற்று ருசிகமுனிவர் தாங்கள் இங்கு எழுந்தருளியது எங்கள் பாக்கியம் எனக் கூறினார். நாரதமுனிவர் ருசிகமுனிவரிடம் உனது மகள் தரிதேவிக்கு ஏற்ற மணமகன் மண்டிவாடை பட்டிணத்தில் சங்கராச்சாரி சாவித்திரிதேவியின் மகன் ஆதி நாக சித்தம செட்டு ஆவார். அவர்கள் உங்களிடம் பெண் கேட்டு வருவார்கள். எனவே நீங்கள் அதை ஏற்று நிச்சயம் செய்து ஆதிநாக சித்தம செட்டுவுக்கு திருமணம் செய்து முடியுங்கள் எனக் கூறினார். அதே போல் ஆதி நாக சித்தம செட்டுவுக்கே தரிதேவியை நிச்சயம் செய்தார்கள்.





ராஜரிஷிகள், ரிஷிபத்தினிகள், நந்தி, நாரதர் ஜமதக்னி முனிவர் எல்லோரும் சூழ்ந்திருக்க ஆதிநாக சித்தம செட்டுவுக்கும் தரிதேவிக்கும் முறைப்படி திருமணம் நடந்தது. அனைவரிடமும் ஆசி பெற்று, தன் கணவன் வீட்டிற்குப் புறப்பட்ட தங்கையிடம் ஜமதக்னி முனிவர் உன் கணவன் வீட்டிற்குச் செல்லும் நீ எத்தனை ஆண்டுகள் ஆனாலும், யுகம் மாறினாலும் குழந்தை

பிறக்கும் முன்பு பிறந்த வீட்டை மிதிக்கக்கூடாது என்று கூறினார். ஆதிநாகசித்தம செட்டுக்கு திருமணம் நடந்த அன்று இரவு பூர்வக்ஞானம் பிறந்தது. அவர் மஞ்சள் கங்கணம், மஞ்சள் ஆடையோடு தவம் செய்யப்புறப்பட்டார். தரிதேவி தன் கணவர் கடுந்தவம் புரிவதைக்கண்டு தரி தேவியும் அதற்கு உதவியாய் இருந்தாள்.



தனது மாமன், மாமியாருக்குப் பணிவிடை செய்து கொண்டு வந்தாள். தரிதேவி தன் வீட்டு வாசலில் ஓர் மல்லிகைச் செடியை நட்டு நீர் ஊற்றி வளர்த்து வந்தாள். அந்த செடி நன்றாக வளர்ந்தது.





தெய்வ அனுகிரகத்தாலும், தரிதேவியின் பதிவிரத தர்மத்தாலும் ஓர் வெள்ளிக்கிழமை அன்று அந்தச் செடியில் எட்டு மொட்டுக்கள் காணப்பட்டன. மறு நாள் சனிக்கிழமை காலை சூரியோதயத்தில் ஏழு மொட்டுகளில் இருந்து ஏழு புதல்வர்கள் தோன்றினர். ஏழு புதல்வர்களையும் வாரி எடுத்து மகிழ்ந்தாள். அவர்களுக்கு மல்லிசெட்டிகள் எனப் பெயரிட்டார். அப்பிள்ளைகள் முறைப்படி கல்வி கேள்விகளில் சிறந்த விளங்கினர். பின்பு அப்பிள்ளைகள் திருமண வயதை அடைந்தவுடன் அவர்களுக்கு மணம் முடிக்கத் தாய் தரிதேவி எண்ணினாள்.

## ஸ்ரீ ரேணுகா தேவி திருக்கல்யாணம்

ஒரு நாள் மாவுரகிரி பட்டிணத்தில் நாரதர், பிருகு முனிவர், துர்வாசர், வசிஷ்டர், வால்மீகி, ருசிகர் ஆகியோர் கூடி ஜமதக்னி முனிவர் ஆசிரமத்திற்ச் சென்றனர். ஜமதக்னியை மணம்புரிந்து கொள்ளும்படி அனைவரும் கேட்டுக்கொண்டனர். ஜமதக்னி

முனிவர் தந்தையிடம் 'எனக்கு என்னைப்போல் காவி வஸ்திரம் தரித்துக்கொண்டு சத்தியத்தோடும் நீதியோடும் நடக்கின்ற ஒரு பதிவிரதையாக இருக்கும் பெண்ணையே நான் திருமணம் புரிந்துகொள்வேன் என்று கூறினார். இதைக்கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்.





ராஜரிஷிகள், தேவரிஷிகள், பிரம்மரிஷிகள் முனிவர்கள், ரிஷி பத்தினிகள், நந்தி, நாரதர், ருசிகர் ஆகிய எல்லோரும் ஓரிகண்டி பட்டிணம் சென்று ரேணு மகாராஜாவை சந்தித்தனர். அவரிடம் உங்கள் மகள் ரேணுகாதேவியை ருசிக மகா முனிவருடைய மகன் ஜமதக்னி முனிவருக்குத் திருமணம் செய்யப் பெண் கேட்டு வந்துள்ளோம் எனக் கூறினர். இதைக் கேட்டு அரசர் மனம் மகிழ்ந்து சம்மதம் தெரிவித்தார்.

இஷ்வாகு வம்சத்து ரேணுமகாராஜா குமாரத்தி ஸ்ரீ ரேணுகா தேவியை பிரம்ம குல ருசிக மகாமுனி குமாரன் ஜமதக்னி முனிவருக்கு உத்தராயண புண்யகாலம் மகர மாதம் சுக்ல பட்சம் ஹஸ்த நட்சத்திரம் வெள்ளிக்கிழமை ஸித்தயோகம் பொருத்திய சுபயோக சுபதினத்தில் திருமணம் செய்வது என்று பெரியோர்கள் நிச்சயித்தனர்.



(ரேணு மகாராஜர் இக்ஷ்வாகு வம்ஸத்தில் தோன்றியவர். அந்தப்பரம்பரைதான் கம்மவார் பரம்பரை ஆகும். அதனால்தான் கம்மவார் குல தெய்வம் ஸ்ரீ ரேணுகாதேவி என்று போற்றப் படுகிறாள்)

இந்தத் திருமணச் செய்தியை நாரதர், பூலோகம், பதினான்கு லோகங்களில் வாழ்பவர்கள். திருமூர்த்திகள், முப்பத்து முக்கோடி தேவர்கள்,தேவ கன்னிகைகள், தேவ ரிஷிகள், ரிஷிபத்தினிகள் ஆகியோரிடம் சென்று தெரிவித்தார். அனைவரும் இதைக்கேட்டு ஆனந்தம் அடைந்தனர். ரேணு மகாராஜர் ஐம்பத்தாறு தேசங்களுக்கும் (ஓலை) திருமுகம் எழுதி தூதுவர் கையில் கொடுத்து அனுப்பினார். அனைத்து ராஜாக்களும் தங்கள் நால்வகைச்சேனைகளோடு ஓரிகண்டி நகரத்திற்கு வந்தார்கள். தேவாதி தேவர்கள் எல்லாம் புறப்பட்டு ருசிக மகாமுனி ஆசிரமத்தை அடைந்தார்கள். ஜமதக்னி முனிவரை அழைத்து வந்து புனித தீர்த்தங்களால் ஸ்நானம் செய்து மணக்கோலம் புனைந்தனர். மேளதாளங்களுடன் இசைக் கருவிகள் முழங்க தேவ தாசிகள் இசை பாட தேவர்கள் சூழ்ந்து வர எல்லோரும் ஓரிகண்டி பட்டணம் வந்து அடைந்தனர்.

அரண்மனை அந்தப்புரத்தில் ரேணுகாதேவியை மாங்கல்யப் பெண்கள் எல்லோரும் சேர்ந்து பல வகையான வாசனைத் திரவியங்களால் ஆன கங்கா ஜலத்தைக் கொண்டு மந்திர உச்சாடனம் செய்யப்பட்ட கும்ப கலசங்கள் மூலம் தேவிக்கு திருமஞ்சனம் செய்து பின்னர் சர்வ அலங்காரம் செய்தனர். கல்யாண மண்டபத்தில் கொலுவீற்றிருந்த சர்வ அலங்காரமாக ஜொலிக்கும் ஸ்ரீரேணுகாதேவியை ஜமதக்னி முனிவர் பார்த்து மிகவும் கோபம் அடைந்தார். இத்தனை ஆபரணங்கள், மலர்கள், வாசனை திரவியங்களுடன் ஸௌந்தர்யமுடன் கூடிய திருமேனியுடன் காணப்பட்ட ரேணுகாதேவியைப் பார்த்து இவ்வளவு ஆடம்பரமாக இருக்கும் உன்னிடத்தில் பதிவிரதை என்பதற்கு என்ன அடையாளம் இருக்கிறது எனக்கேட்டு எனக்குத் தவக்கோலம் பூண்டு இருக்கும் பெண்ணே மனைவியாக வரமுடியும் எனக்கூறி அலங்காரமும், ஆபரணங்கள் மீது ஆசை கொண்ட பெண் எனக்கு வேண்டாம் எனச் சொல்லி சினங் கொண்டு எழுந்து மண்டபத்தை விட்டு வெளியேறினார். இதைப்பார்த்த ரேணுகாதேவி ஆஹா இப்படியும் ஒருவர் உண்டா? அழகை ரசிக்காமல் தவக்கோலத்தை விரும்பிய அவருடைய மகிமையை என்னவென்று கூறுவது' என நினைத்து மகிழ்ந்தாள்.

திருமணத்திற்கு வந்த அனைவரும் மண்டபத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். ரேணுகா தேவியோ தான் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி விட்டு, பட்டு வஸ்திரங்களைக் களைந்து ஒரு காவி உடை அணிந்து துளசி மணிமாலை கழுத்திலே அணிந்து தவக்கோலம் பூண்டார். தன் தந்தையிடம் சென்று 'எப்போது அவரை என் கணவர் என்று நினைத்தேனோ இனி அவரே எனக்கு எல்லாம் எனச் சொல்லி தந்தையிடம் இருந்து விடைபெற்று இமய மலைச் சாரலில் கங்கா நதி தீரத்தில் அவரை நினைத்து தவம் செய்து கொண்டு தவக்கோலத்தில் அமர்ந்திருந்தாள். அருகில் எலுமிச்சம்பழ வனம் இருந்தது. மனதில் உள்ள ஆசாபாசங்களை உதறினாள். மனதை ஒரு நிலைப்படுத்தினாள். பிறகு ரேணுகாதேவி ஜமதக்னி முனிவர் இருந்த ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கு அவரைப் பார்த்து என் ஆடம்பரத்தைத் துறந்து உங்களைப்போல்தவக்கோலம் பூண்டு உங்களை மணம் செய்து உங்களுக்குப் பணிவிடை செய்ய வந்துள்ளேன் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் எனக் கூறினாள்.

ஜமதக்னி முனிவர் 'நீ பதிவிரதை என்பது உண்மையானால் இங்குள்ள தாமரைத் தடாகத்திற்குச் சென்று நீராடி அந்தத் தாமரை நூலை எடுத்து ஆடையாகச் செய்து அதை அணிந்து வரவேண்டும்' என்றார். ரேணுகா தேவியும் அவ்வாறே செய்தாள் ஜமதக்னி முனிவரோ, 'இதனால் மட்டும் நீ மகா பதிவிரதை என்று ஆகிவிடமுடியுமா? மூவர்கள் சாட்சியாக, தேவர்கள் சாட்சியாக எல்லை மீறிய மகா பதிவிரதை என்பது உண்மையென்றால், அருகிலே இருக்கின்ற கங்கா நதியில் நீராடி, மணலிலே குடம் செய்து, மண் குடத்திலே ஜலம் எடுத்து வந்து எனது உச்சிவேளை யாகசாலை பூஜைக்கு ஜலம் கொடுத்தால் நீயே மகா பதிவிரதை என்று ஏற்றுக்கொண்டு முனிவர்கள் தேவர்கள் சாட்சியாக உன்னை மணம் செய்து கொள்கிறேன்' என்று ரேணுகாதேவியிடம் தீர்மானமாகத் தெரிவித்தார். ரேணுகாதேவி, கணவன் என்று மனதில் ஜமதக்னி முனிவரை முடிவு செய்ததால் அவர் சொல்லியபடி செய்ய வேண்டியது நம் கடமை என்று எண்ணினாள்.

ரேணுகா தேவி சர்ப்பத்தை சும்மாடாகச் சுற்றி தலையில் வைத்துக் கொண்டு, தீர்த்தம் நிறைந்த மணல் குடத்தை அதன் மேல் வைத்து, ஜமதக்னி முனிவரின் உச்சி வேளை பூஜைக்கு ஒரு

வினாடி கூட தவறாமல் தீர்த்தம் கொண்டு வந்து கொடுத்தார். இதைக் கண்ட ஜமதக்னி முனிவர் மனம் மகிழ்ந்து, 'நீயே மகா பதிவிரதை, உன்னையே மணம் செய்து கொள்கிறேன்' என்று சம்மதித்தார்.

இதை ஆகாய மார்க்கத்தில் நின்று பார்த்துகொண்டிருந்த தேவர்கள் அனைவரும் மனம். மகிழ்ந்து ரேணு அரசனுக்கு இச்செய்தியைச் சொல்லி அனுப்பினார்கள். அரசனும் மற்றவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். பிரம்ம தேவன் புரோகிதராய் அமர்ந்து சகல வேத மந்திரங்களுடன் ஜமதக்னி மகிரிஷிக்கும் ரேணுகா தேவிக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார். எல்லோரும் ஆசிர்வாதம் செய்து மகிழ்ந்தனர்.

## பரசுராமர் அவதாரம்

ரேணுகாதேவி தினந்தோறும் கங்கைக்கரைக்கு சென்று மணலிலே குடம் செய்து ஜலம் எடுத்து வந்து உச்சிவேளை பூஜைக்கு ஒரு வினாடி தவறாமல் தீர்த்தம் கொடுத்து வந்தாள். ஜமதக்னி முனிவர் யாகபூஜைகளைச் செய்து தவத்தில் ஈடுபட்டார். இதை அறிந்த ருசிகர் ஜமதக்னி முனிவர் பிரம்மச்சரிய தவத்தைப்பற்றி பிருகு முனிவரிடம் கூறினார். இதனால் பிருகு முனிவர் தம்பதிகளை பாலமலைச்சாரலுக்குப் போகும்படி கூறினார். ஜமதக்னி முனிவரும் ஸ்ரீரேணுகாதேவியும் பாலமலைச்சாரலுக்குச் சென்று ஆசிரமம் அமைத்து வாழ்ந்தனர். பாலமலைச் சாரலில் அல்லி, முல்லை, இருவாட்சி, சம்பங்கி, மலர்கள் பூத்துக் குலுங்கின . பாரிஜாத மலர்கள் நிறைந்த மரங்கள் வனங்களில் காணப்பட்டன. அங்கிருந்த சகல விதமான பட்சிகள், மிருகங்கள் எல்லாம் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தனர். ஜமதக்னி முனியும் ரேணுகாதேவியும் மிகவும் சந்தோஷமாக இல்லறத்தில் ஈடுபட்டனர்.



ரேணுகா தேவிக்கு விஜயன், விஸ்வனன், கிரோசன், லம்பன் என நான்கு குமாரர்கள் பிறந்தனர். ஐந்தாவதாக கையில் பரசும் ஏந்தி நெற்றியில் திருநாமத்துடனும் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையை நாரத முனிவர் முதலானோர் வந்து பார்த்து ஆசீர்வதித்தனர். நாமத்துடனும் கையில் பரசுடனும் பிறந்ததால் 'பரசுராமர்' என்று நாமகரணம் செய்தனர்.

மாவுரகிரி பட்டிணத்திற்கு எடுத்து வந்து தங்கத் தொட்டிலிலே வைத்து தாலாட்டினர். சில ஆண்டுகளுக்கு பிறகு ஜமதக்னி ரேணுகாதேவிக்கு ஆறாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை தங்க தொட்டிலிட்டு சீராட்டி பாராட்டி 'ஸ்ரீ கௌரி' என்று பெயரிட்டு வைத்தனர். ஸ்ரீ கௌரியும் கலைகள் பயின்று கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாள்

ஓரி கண்டி பட்டணத்தில் தரிதேவியின் அண்ணன் ஜமதக்னி மகா முனிவர் தம் மனைவி ரேணுகா தேவியுடனும் மகள் கௌரியம்மாளுடனும் வாழ்ந்து வந்தார். அண்ணன் மகளான கௌரியைத் தன் பிள்ளைகளில் ஒருவனுக்குத் திருமணம் செய்ய தரிதேவி எண்ணினாள். கௌரியின் குணநலன்களை அறிந்து கொள்ள விரும்பினாள். இடைப் பெண் வேடம் தாங்கி மோர் விற்க ஓரிகண்டி பட்டணம் சென்றாள். தான் விற்கும் மோர் தெய்வத்தன்மை உடையது. மோரை முத்து, பவளம் ஆகியவற்றிற்கு விற்கும் அதிசிய இடைப்பெண்ணை, ஊரே ஆச்சரியப் பட்டுப் பேசியது.




அரண்மனையில் இருந்த கௌரி இதை அறிந்து மோர் விற்கும் இடைப்பெண்ணை அழைத்துவர சேவர்களை அனுப்பி வைத்தாள் இடைப்பெண் ஆன தரிதேவி கௌரியைப் பார்த்து மனமகிழ்ந்து மோரின் அதிசயத்தை சொல்லி அற்புதத்தைக் காட்டி முதுமை இளமை திரும்புவதை ஒரு நூறு வயதுடைய அச்சம்மாள் என்ற கிழவியை இளமை அடையச்

செய்தாள். அச்சம்மாளின் கணவருக்கு மோர் குடிக்கச் செய்து இளமை அடையச் செய்தாள். இருவரையும் சந்தோஷமாக அவர்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்தாள். தரிதேவி கௌரியைப் பார்த்து பேசிவிட்டு மகிழ்ச்சியுடன் மாவுரகிரிப் பட்டணம் புறப்பட்டாள் வரும்வழியில் கௌரியின் சகோதரர் ருமண்வாண் தரிதேவியை நிறுத்தி மோர் விற்பதற்கு சுங்கம் கேட்டு பவளத்தையும், முத்தையும் பறித்துக் கொண்டு அனுப்பினான்.



தன் தாய் தரிதேவிக்கு கௌரியின் சகோதரன் ருமண்வான் செய்த கொடுமையைக் கேட்டு ஏழு மல்லி செட்டுகளும் கோபம் கொண்டனர். தாயிடம் அம்மா நாங்கள் கௌரியை சிறையெடுத்து வருகிறோம் என்றனர். அதற்கு தரிதேவி கௌரி மகா பதிவிரதை அவளைத் தொட்டால் நீங்கள் பஸ்பமாய் விடுவீர்கள் எனவே அவளைத் தொடாமல் எடுத்து வாருங்கள் என்று கட்டளை இட்டாள். ஏழு மல்லி செட்டுகளும் வியாபாரிகளைப் போல வேடமிட்டுக் கொண்டு ஓரிகண்டிப் பட்டணத்தை அடைந்தார்கள்.



கௌரியின் மாளிகைக்கு முன்புறமுள்ள இடத்தில் கூடாரங்களைப் போட்டு கடைபரப்பி வைத்து வியாபாரம் செய்தனர். கௌரி காலையில் எழுந்து நீராடி சூரிய நமஸ்காரம் செய்யக் கிழக்குத் திசை பார்த்த போது அங்கு ஏழு கூடாரங்கள் புதிதாக இருப்பதைப் பார்த்தாள். ஏழு வெண்கலக் கம்புகளும் ஏழு தேவதைகளாகக் காட்சி அளிக்கக்கண்டாள்.

தனது சேவகர்களை அழைத்துக் கூடாரம் அமைத்து அதில் வியாபாரம் செய்யும் நகை வியாபாரிகளை அழைத்து வரும்படி கூறினாள். அந்த ஏழு வியாபாரிகளும் கௌரியிடம் விதவிதமான நகைகளையும், வளையல்களையும் காட்டினார்கள். திரையின் மறைவில் இருந்த கௌரி தனக்கு வளையல்கள் வேண்டும், என்ன விலை என்று கேட்டாள். விலைமுடித்து வளையல்களை அணிவிக்கத்திரையை விலக்க அப்போது ஏழுபேரும் மஞ்சள் கயிற்றில் மாங்கல்யத்தை கோர்த்து கையில் வைத்து கொண்டிருந்தனர்.



அதைப் பார்த்த கௌரி அது ஏதோ புதிய நகை என்று நினைத்துக் கொண்டு, இதை தன் கழுத்தில் போட்டுப் பார்க்க வேண்டும் என்றாள். அந்த மாங்கல்யத்தை அவர்களிடம் இருந்து பிடுங்கி தனது கழுத்தில் அணிந்து கொண்டாள். மாங்கல்யத்தில் மயக்கமூட்டும் பொருள் இருந்ததால் மாங்கல்யத்தை அணிந்து கொண்ட சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தாள். கம்பளத்தின் நான்கு மூலைகளை முடிந்து சிறை எடுத்துச் சென்றனர் தாய் தரிதேவி தனது பிள்ளைகளைப் பார்த்து கௌரியை ஏன் சிறை எடுத்து வந்தீர்கள்? இவளுடைய அண்ணன் பரசுராமன் கோபம் மிக்கவனாயிற்றே, உங்களை சும்மா விடுவானா, இவளைச் சிறை எடுத்து வந்து தீமையைத் தேடிக் கொண்டீர்களே! என்றாள். தன் தங்கை கௌரியைக் கூடாரங்களில் தங்கியிருந்த வியாபாரிகள் கடத்திச் சென்று விட்டார்கள் என்ற செய்தியை அறிந்து பரசுராமன் மிகுந்த கோபத்துடன் புறப்பட்டு வந்தான். தனது அண்ணன் பரசுராமன் கோபத்துடன் வந்ததைக் கண்ட கௌரி 'அண்ணா கோபப்பட வேண்டாம். அத்தை புதல்வர்களைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ நான் விரும்புகிறேன். திருமணத்தை உடனிருந்து நடத்திவை' என்றாள். பரசுராமன் நீங்கள் கௌரியைச் சிறை எடுத்துவந்ததால் அவளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றான். அதைக்கேட்ட ஏழு மல்லிச்செட்டுகளும் கௌரி

தெய்வத்தன்மை உடைய பெண் அவளை மணம் செய்து அவளோடு கூடி வாழ்ந்தால் நாங்கள் பஸ்பமாகி விடுவோம். அவளுடன் திருமணம் எங்களுக்கு வேண்டாம்' என்றனர்.

கௌரி பரசுராமனிடம் 'அண்ணா என் அத்தை தரிதேவியின் மக்கள் ஏழு பேரும் என்னைத் திருமணம் செய்து கொள்ளும் முறையும் உரிமையும் உடையவர்கள் அவர்களோ நான் தெய்வாம்சம் பொருந்திய பெண் என்பதால் மணம் செய்து கொள்ள மறுக்கிறார்கள். நானோ இவ்வேழுபேர்களால் எடுத்து வரப்பட்டவள் எனவே இனி நான் எந்த ஆடவரையும் மணம் செய்து கொண்டு உலகில் வாழ விரும்பவில்லை. எனக்கு திருமணமே வேண்டாம். நான் யார் வீட்டிற்கும் போகவில்லை.



அல்லிமலர் நிறைந்த இந்தத் தடாகத்துக்கருகில் அரளி, எலுமிச்சை மற்ற மலர்கள் நிறைந்த வனப்பகுதியில் அங்கு அம்மிக்கல் மீது அமர்ந்து தியானத்தில் இருந்து தெய்வ அம்சமாக ஸ்ரீ கௌரி அம்மனாக ஐக்கியமாகி விடுகிறேன் என்று சொல்லி ஸ்ரீ கௌரி அம்மனாக எல்லோருக்கும் காட்சி தந்து ஆசிர்வதித்தார்.

ஸ்ரீ ரேணுகாதேவி திருவடிகளே சரணம்
ஸ்ரீ கௌரி அம்மன் திருவடிகளே சரணம்

## கௌரியம்மன் கதை

கம்மவார் குலத்தை உருவாக்கிய பேணிக்காத்த அன்னை ரேணுகாதேவியின் மகளே! கௌரியம்மன் ஓரிகண்டி பட்டணத்தில் தனது தமையன்மார்களாலும், தாய்மாமனாலும், சீரும்சிறப்புமாக வளர்க்கப்பட்டாள். கௌரியம்மனின்அத்தை தரிதேவி (ஜமதக்னியின் தங்கை) தனது மக்கள் ஏழுபேர்களில் ஒருவனுக்கு கௌரியம்மனைத் திருமணம் செய்துவைக்க விரும்பினாள், அன்னையின் விருப்பத்தை நிறைவேற்ற கருதிய ஏழு பேரும் மாறு வேடத்தில் சென்று கௌரியை மயக்கிச் சிறை எடுத்து வந்தனர், பின்னர் கௌரியம்மன் தெய்வ அம்சம்

நிறைந்தவள் என்பதை உணர்ந்து அவளைத் திருமணம் செய்து கொள்ள மறுத்தனர், அதனால் வேதனை அடைந்த கௌரியம்மன் தான் எழுபேரால் எடுத்துக் கொண்டு வரப்பட்டவள். இனி நான் எந்த ஆடவனையும் மணந்து இவ்வுலகில் வாழ விரும்பவில்லை, பிறந்த வீட்டிற்கும் செல்லவில்லை. அல்லி மலர் நிறைந்த தடாகத்தின் அருகில் அரளியும், பிற மலர்களும் நிறைந்த இடத்தில் எலுமிச்சை மரத்தடியில் அம்மிக்கல்லின் மேல் அமர்ந்து தெய்வமாகி விடுகிறாள்.



அம்மிக்கல்லே கௌரியம்மனாக பூஜிக்கப்படுகிறது. அப்பொழுது கௌரியம்மன் ஒரு வாக்கு தருகிறாள். ஏழு குல பெண் குழந்தைகள் விரதமிருந்து என்னை வணங்குவார்கள். அவர்களில் ஆறு பேர்களது விரதம் செல்லும், கம்மவார் வம்சத்தில் பிறந்த பெண்குழந்தை அக்கம்மாவின் விரதம் மட்டும் செல்லாது போய் விடும். அதனால் கம்மவார் குலத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு 7, 9, 11 ஆம் வயதுகளில் ஏதாவது ஒரு வயதில் உத்தாபின சீர் செய்ய வேண்டும் அவ்வாறு செய்யாது போனால் அந்தப்பெண்ணுக்கு மாறாப்பு அணியும் சீரும், திருமணத்தின் போது நலங்கு சீரும், குழந்தை சீரும் செய்ய இயலாது போய் விடும் என்பதே கௌரியம்மன் தந்த வரமாகும். அன்று ரேணுகாதேவியால் பாதுகாக்கப்பட்ட கம்மவார் குலம், தன்னையும் மறவாது போற்ற வேண்டும் என்பதே கௌரியம்மனின் விருப்பம் போலும். பின்னர் கௌரியம்மன் பூமியில் அம்மிக்கல்லில் ஐக்கியம் ஆனாள். கௌரியம்மனின் விருப்பத்தின் படியே கம்மகுலத்தவரால் கௌரி விரதம் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

கம்மவார் குல அக்கம்மாவுக்கு கௌரி விரதம் செல்லாமல் போனது கௌரியம்மன் கூறிய வாக்குப்படியே தொடக்க காலத்தில் பிராமணகுலம், கம்மவார் குலம், கோமுட்டி குலம், கொல்லகுலம், பலிஜவார் குலம், பட்ராஜு குலம், உடையார் குலம் ஆகிய ஏழு

குலத்தில் பிறந்த குழந்தைகளும் தத்தம் 7,9,11 வயதுகளில் கௌரிவிரதம் இருந்தனர் இவ்வாறு விரதம் இருந்த சமயம் கம்மவார் குலப் பெண் குழந்தை அக்கம்மாள் தனது அண்ணன்மார் மூவரோடு வாழ்ந்து வந்தாள் அவர்கள் தங்களது ஒரே தங்கையான அக்கம்மாள் மீது மிகுதியான பாசம் கொண்டிருந்தனர். அக்கம்மாள் உரிய வயதினை அடைந்ததும் கௌரி விரதம் வைத்து சாமி கும்பிட முடிவு செய்தனர், விரதத்தைக் கடை பிடிக்கின்ற மற்ற ஆறு பெண் குழந்தைகளையும் தமது வீட்டிற்கு வர வழைத்து விரதம் இருக்கச் செய்தனர்.



விரத நாளில் (கௌரி விரதத்தை ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் பௌர்ணமிக்கு அடுத்த மூன்றாவது நாளிலும் மூன்று வருடங்களுக்கு ஒரு ஐப்பசி மாத பௌர்ணமிக்கு அடுத்த மூன்றாவது நாளும் அனுஷ்டிப்பது முறையாகும்) சூரிய உதயத்திற்கு முன்னர் 7 குழந்தைகளையும் குளிப்பாட்டி சாமி கும்பிட்டு விரதம் தொடங்கினர். அதிகாலையில் குழந்தைகளுக்கு பால் பழ வகைகள் விரத உணவாக வழங்கினர். குழந்தைகளைக் கோவிலுக்கு அழைத்துச்சென்று இறைவனை வணங்கினர், கூடைகள் கொடுத்து மலர் கொய்து வர அனுப்பினர். குழந்தைகள் ஏழு பேரும் ஊஞ்சலாடி மகிழ்ந்தனர், மாலைப்பொழுது வந்தது, பிற குலத்தை சேர்ந்த ஆறு குழந்தைகளும் தத்தம் வீடுகளுக்கு சென்றனர். பகல் முழுவதும் விரதம் மேற்கொண்டதால் கம்மகுல அக்கம்மாள் பசிமயக்கத்திற்கு ஆளானாள். அப்படியே படுத்து உறங்கி விட்டாள்.

விவசாயிகளான அண்ணன்மார்கள் தோட்டத்தில் உள்ள சோளக்காட்டில் சோளக்கருது அறுவடைக்காக தோட்டத்திற்குச் சென்று விட்டு மாலையில் வீடு திரும்பினர். பிறகு தன் தாயிடம் உணவு படைக்கும்படி கேட்டனர் அதற்கு அந்தத் தாய் உங்கள் தங்கை ஸ்ரீ கௌரியம்மைக்கு விரதம் இருக்கிறாள், விரதம் முடிந்து பிறகு எல்லோரும் உணவு பரிமாறி சாப்பிடலாம் எனக்

கூறினார்கள். தங்கையின் பசி மயக்கம் அவர்களை வேதனைப் பட வைத்தது. கௌரி விரதம் மேற்கொள்ளும் நாளில் இரவு நிலவு உதித்த பின் நிலாவைப்பார்த்து வணங்கிய பின்னர்தான் விரதத்தை முடிக்க வேண்டும் என்பது நியதி. ஆனால் அது வரை தமது தங்கை பசி பொறுக்க மாட்டாள். நிலா உதிப்பதற்கு முன்னரே நிலாஉதித்து விட்டதாக நம்பவைத்து விரதத்தை முடிக்கச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தனர். ஒரு அண்ணன் அரசமரத்தில் ஒரு கண்ணாடியைக் கட்டி வைத்தார், மற்றொரு அண்ணன் அதன் எதிரில் இருந்த புளியமரத்தில் தீயை உண்டாக்கினார். அந்த அரச மரத்துக் கண்ணாடியில் புளியமரத்தில் இருந்த நெருப்பு நிலா கிளம்பி வருவது போன்று ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்கியது. பின்னர் அண்ணன்மார்கள் அக்கம்மாவை வீட்டிற்கு வெளியில் அழைத்து வந்து, இதோ பார் நிலா உதித்து விட்டது நீ நிலாவை கும்பிட்டு விரதத்தை முடித்துக் கொள்ளலாம் என்றனர். தான் கண்ட நிலாத் தோற்றத்தை உண்மை என நம்பிய அக்கம்மாள் நிலாவை வணங்கி விரதத்தை முடித்துக்கொண்டு படுத்து உறங்கி விட்டாள்.

வானத்தில் உண்மையான நிலாவை கண்ட பிற குல குழந்தைகள் ஆறு பேரும் கம்மவார் குல அக்கம்மா வீட்டிற்கு வந்தனர். அவர்களைப் பார்த்த அக்கம்மாவின் அண்ணன்மார்கள் எங்கள் அக்கம்மா நிலாவைப் பார்த்துக் கும்பிட்டு விட்டு விரதம் முடித்து விட்டாள் என்று கூறினர். அதைக்கேட்ட பிற குலப்பெண்கள், இப்போது தானே நிலா உதித்தது உங்கள் அக்கம்மா எப்படி விரதம் முடிக்க முடியும் என்று கேட்டு மிகுதியான வேதனைக்கும் சினத்திற்கும் ஆளாயினர். முறையான விரதம் மேற்கொள்ளாத அக்கம்மாவின் கௌரி விரதம் செல்லுபடியாகாமல் போகட்டும், விரதம் செல்லுபடி ஆகாமல் போனதால் உங்கள் கம்மவார் குலத்தில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு, 7, 9,11, ஆம் வருடங்களில் உத்தாபின சீர் செய்ய வேண்டும் என்று சாபம் இட்டனர் கௌரி விரதம் மேற்கொண்டபோது அக்கம்மாவின் விரதத்திற்கு அவரது அண்ணன்மார்களால் பங்கம் ஏற்பட்டதால், உத்தாபின சீர் செய்யும் போது சகோதரர்கள் அருகில் இருக்கக் கூடாது என்ற நியதி ஏற்பட்டது.

## கௌரி விரத பூஜை அனுஷ்டிக்கும் முறை:

பொதுவாக ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மாதங்களில் பௌர்ணமிக்கு அடுத்த 3வது நாள் இவ்விரதம் அனுஷ்டிக்கப் படவேண்டும் இதனை கம்மவார் தத்துலு பண்டக, உத்தாபின சாங்கியம், அசூன்ய சயன விரதம் எனவும் வழங்குவர்.

பெண் குழந்தைகள் வயது 7,9,11, இருக்கும் பட்சத்தில் இந்த சீர் செய்யப்படும் உற்றார் உ றவினர், சுற்றத்தாரை அழைக்க வேண்டும் வயதான சுமங்கலி பெண்கள் மூவரும் ஆடவர் இருவரும் (இரண்டு தம்பதிகள் ஒரு சுமங்கலி என ஐவர்), குழந்தையும் விரதமிருக்கவேண்டும். சூரியன் உதிப்பதற்கு முன்னரே குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து, அரப்பு வைத்து, மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும். பெரியோர்கள் ஐவரும் குழந்தையை நடுவில் உட்காரவைத்து தலைவாழை இலை போட்டுச் சிற்றுண்டி சாப்பிட வேண்டும், பகலில் சாப்பிடக்கூடாது. ஊஞ்சல் கட்டிக் கொடுத்து விளையாடச்செய்ய வேண்டும். விரதம் மேற்கொள்ளும் நாளில் அந்தக்குழந்தை வாசற்படியிலோ, நிலைப்படியிலோ, தொடவோ, மிதித்து நடக்கவோ கூடாது. அன்று மாலையில் நீராடி புத்தாடை அணியச் செய்யவேண்டும். தலைவாரி பூச்சூட்டி குழந்தையை நன்கு அலங்கரிக்கவேண்டும், நெற்றியில் ஆண்டாள் திருமண் வைக்கவேண்டும். மாலையில் விரதம் மேற்கொண்ட பெரியோர்கள் ஐவரும் குழந்தையை அழைத்துக் கொண்டு உற்றார் உறவினருடன் கௌரியம்மன் கோவிலுக்குச் செல்லவேண்டும். கௌரியம்மனுக்குத் தனியாகக் கோவில் கிடையாது. ஏதாவது பெருமாள் கோவிலிலோ அல்லது குலதெய்வக் கோவிலிலோ கௌரியம்மன் கொலு வைத்து பூஜைகள் செய்யலாம்.

கோவிலில் அரளிச்செடிகள், எலுமிச்சைசெடிகள் இருந்தால் மிகவும் நல்லது. அந்த இடத்தில் தென்னை மட்டையில் பச்சை மட்டையாகப் பார்த்துப் பின்னிப் பந்தல் அமைக்க வேண்டும், அதில் நான்கு பக்கமும் வாழைக்கன்றுகள் கட்ட வேண்டும். பின்பு அதில் மாவிலைத் தோரணம், மலர்கள், மலர் தொடர்களால் அலங்கரிக்கப்பட வேண்டும். பின்பு மெழுகி, கோலமிட்டு, அங்கு

அம்மிக்கல் வைக்க வேண்டும். அதன் மீது குழவியை நிறுத்தி முகம் வைத்து நகைகளால் அலங்கரிக்க வேண்டும். பின்பு மாலைகள் தொடர் போட்டு பன்னீர் தெளித்து தாமரை, அல்லி, மல்லி மலர்களை வைக்கவேண்டும். பின்பு குழந்தைகள் வழி பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பைநான் கதை சொல்வதும் வீரணம் வாசிப்பதும் தொன்று தொட்டு நடைபெறுகிறது. கோவிலில் பூஜை நடக்கும் போது பைனான் பாட்டு பாடி வீரணம் வாசிக்க வேண்டும்.

## கோவிலுக்கு எடுத்துச் செல்ல வேண்டியவை

ஒரு தட்டில் வாழை இலை போட்டு அதில் பதினோரு எண்ணிக்கையில்

- உப்பட்டு
- உப்பில்லாத தோசை
- உப்பில்லாத வடை
- உப்பில்லாத பருப்பு சாதம்
- கச்சாயம்
- உப்பில்லாத பணியாரம்
- தெல்லஅட்லு

ஆகியவற்றை வைத்து இன்னொரு இலையால் மூட வேண்டும். மற்றும்

- நெய்
- பழம் (1 சீப்பு)
- ஊது பத்தி
- அரளி
- மல்லிகை
- துளசி
- நவதானியம்
- தேங்காய்
- வெற்றிலை பாக்கு
- கற்பூரம்
- வில்வம்
- தாமரை
- உதிரிப்பூக்கள்

எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் செல்லவேண்டும்.





மஞ்சள் தடவிய முந்நூலில் அரளிக்காய் ஒன்றினைக்கட்டி குழந்தையின் வயதிற்கு ஏற்ப முடிச்சுகள் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும், முந்நூல் குழந்தையின் கையில் கட்டும் அளவுக்கு இருத்தல் வேண்டும். கொண்டு வந்த பூஜைப் பொருள்கள் அனைத்தையும் கௌரியம்மனின் முன்னால் படைத்து மஞ்சள் பிள்ளையார் வைத்து பூஜை செய்து விட்டு குழந்தைகளும் பெரியோர்களும் அங்கு கூறும் கௌரி அம்மனின் கதையை அமைதியாகவும், பக்திசிரத்தையாகவும் கேட்க வேண்டும்.

## ஸ்ரீ கௌரி கதை

மன கம்மவாரி வம்சான ஸ்ரீஜமதக்னிமுனி ஸ்ரீ ரேணுகாதேவி தம்பதிக்கு புட்டின ஒகே கூத்துரு ஸ்ரீ கௌரி. ஆ கௌரியம்மா தன மேனத்த கொடுக்குலு பெண்ட்லி செய்யனுன்ட்ட செப்பினதானிவல்ல, இன்க ஈ பூலோகான எவரினி மன பெண்ட்லி செய்யராதுண்ட வைராக்கியம் பெட்டி சல்லப்பராயி மீந்த (அம்மிக்கல்) கூகண்டி தெய்வ அம்சங்க ஐக்கியம் அய்யிபோய. அப்புடு தனக்கு கம்மவாரி வம்சால ஏடுகுரு அக்கம்மகாரு ஒக்க பொத்து உண்டாலன்ட செப்பினாரு, தானிவல்ல, ஸ்ரீ பால கௌரம்மக்கு 1.பாப்பனராலு அக்கம்மா, 2.கம்மவாரி அக்கம்மா 3.பலிஞ்சவாரி அக்கம்மா, 4.கும்மர அக்கம்மா, 5.சாக்கள அக்கம்மா, 6.கோமிட்டி அக்கம்மா, 7.ஏலமாரி அக்கம்மா வீரு ஏடுகுரு ஒக்க பொத்து உண்டரி, தாண்டில கம்மவாரி அக்கம்மதோ புட்டின அண்ணகாரு ஏடுகுரு. அப்புடு வான்ல தோட்டல ஜொன்ன கோன்த்த நடிசிகினி உண்டாதி, அதி முடிஞ்சனக்க அண்ணகாரு இண்டிகி ஒச்சேரு, இன்ட்ல ஒச்சி அம்மணி பிலிசி அம்மா ஆங்கட்டிக்கி போஜனமு பெட்டமனி அடிகிரி இதிவினி ஆதல்லி ஒச்சி கொடுக்குலாரா மீதோட புட்டின செல்லிலு அக்கம்மா ஸ்ரீபால கௌரம்மக்கு ஒக்க பொத்துலு உண்டாறு, நிலபாரி உதயம்யனக மன அக்கம்மா , நிலபாரி சூசி நமஸ்காரம் சேசி ஸ்ரீ கௌரம்மனு சேவிஞ்சி ஒக்க பொத்து விடிசினாக, மீரும் ஒக்கபொத்து உடுஸ்துரு அட்ன்ட்ட செப்பிரி. அப்புடு அண்ணகாரு ஏடுகுரு இண்டிலோ போய்சூடங்க கூட புட்டின செல்லிலு ஆ ஏடுகுறுதோ அன்னம் லேகுண்ட ஒக்க பொத்து உண்டினவல்ல முகமந்த வாடி மந்த்தேனம் பட்டி, நிதர பாகுண்ட பூமில கூக்கண்டி ஆக்கடிதோ உண்டேரு. இதி சூசின

அண்ணகாரு ஏடுகுருதோ புட்டி ஆங்கலி தாலகுண்ட இந்த விசனமுதோ கூகண்டி உன்டின செல்லிலு முகம் கூட முடஞ்சகுண்ட, மனகே இந்த ஆங்கிலி அயினே, மன செல்லிலு எட்டா ஆங்கிலி தாலு அண்ட விசனப்படினாரு.

ஆணிக ஒக அண்ண பாரிபோய் ஆரிமானில (அரசமரம்), அந்தமு (கண்ணாடி) கட்டங்க, ஒக அன்ன பாரிபோய் சிந்தமானில, (புளியமரம்) ஸிந்து லோமுனு (தீ மூட்டுதல்) ஆ



அரிமானில அந்தமுல சிந்தமானு நிப்பு தெலவங்க, நிலா உதயமையினன்ட்ட தெளவங்க, அக்கம்மனு பிலிசிகினி ஒச்சி, அ நிலபாரினி, சூசி சேவிஞ்ச்சமண்ட செப்பினாரு. அக்கம்மா ஒச்சி நிலவாரி சூசி நமஸ்காரம் சேசி ஒக்க பொத்து விடிசினாரு. ஆனிக அந்துரு கடுபுநிண்ட,போஞ்சேசி ஆநிக ஒக்கலு தோம்பாக்குலு ஏசிகினி, கூகண்டிக்கினி உண்றி தா னிக்கு எனக்க, நிலபாரி உதயம் அயிந்தி, அப்புடு 1. பாப்பான அக்கம்மா, 2.பலிஞ்சவாறு அக்கம்மா, 3.ஏலமாரி அக்கம்மா, 4.கும்மர அக்கம்மா, 5.சாகல அக்கம்மா, 6.கோமுட்டி அக்கம்மா ஆறு குரு ஒச்சி அக்கம்மனி பிலவங்க, ஆ அண்ணகாரு ஏடு குரு ஒச்சி செப்பிரி மா அக்கம்மா ஆங்களிதாளகுண்ட, மாகு ஆங்களிதாளகுண்ட, அரிமானிக்கி அந்தம் கட்டி, சிந்தமானூல சிந்த லேப்பக, நிலவாரி உதயமயினன்ட்ட தெலவங்க, மா அக்கம்மா நிலபாரினி சேவிஞ்சி பூஜலு சேசி ஒக்கபொத்து உடுசி, மேமு அந்துரு போஞ்சேசி கூக்கண்டிகினி உண்டேவு அண்ட செப்பினாரு. இதி வினின ஆறுகுறு கன்னிபிடலு, கோபமு ஒச்சி, மா ஆறுகிரிணி விடிசி மீ அக்கம்மா ஒக்க பொத்து விடிசின வல்ல, மா ஆறுகுறு சாபம் இதி அண்ட செப்பிரி. நேண்டு தினம் சந்த வேளல ஒக நூறு சம்மச்சரம் அயின பண்டு முசிலி பிருது மீயிண்டி பயிட்ட கடப்பமீந்த நிலிசி, செய்யில கெந்தப்ப செக்கலுக்கு கெரிக்கே வோ்ல சுட்டி பெட்டிக்கினி மீ அக்கம்மனு பிலிசு. அப்புடு மீரு மீ அக்கம்மனு ஆ

பண்டு முசிலி பிருது கூட அம்பி பெட்டால, அட்ட மீரு அம்பி பெட்டலேதண்டே, மீ அக்கம்மக்கு நானாட்டா நலபை எனிமதி வியாதிலு கனண்ட்ட சாபமிச்சிரி. தானிவல்ல, அதே விதங்க, அ முசிலிப் பிருது ஒச்சி மன கம்மவாரு அக்கம்மனி பிலிசிரி அப்புடு நளுகுரு அண்ணகாரு அக்கம்மணி அமுசிலி பிருது கூட அம்பி பெட்டினாரு. முசிலி பிருது கூட போயின அக்கம்மா அனேக கஸ்டாலு படி உண்டேபுடு, விஜயபுரி பட்டணமுல ஸ்ரீ பாலகௌரம்மா அனுக்கிரஹம் வல்ல ஈஸ்வரன் பார்வதி அனுக்கிரஹம் வல்ல சாப விமோசனம் தொரிகி பாக உண்டாதி.

ஒக்கபொத்து விடசி ஆறுகுறு அம்மகாரு சாபம் விடிசி நூறு வயசு முசலி பிருது கூட அனேக கஷ்டாலு படன வல்ல, மன கம்மவாரி வம்சால ஆண்டபிடலு புட்டிதே 7,9,11, சம்மச்சரால 'கௌரம்மா விரதம் பெட்டி உத்தாபின சாங்யம் செய்யாலன்ட்ட ஐதீகம் ஒச்சிந்தி.

ஓம் ஸ்ரீ கௌரியம்மன் திருவடிகளே சரணம்

கதை கேட்டு முடித்த பின்னர் நைவேத்தியம் செய்து பூஜைகள் செய்து அம்மனை வணங்க வேண்டும்.







பின்பு கொண்டு போன பலகாரங்களில் கொஞ்சம் கௌரிக்கு சமர்ப்பித்து விட்டு, கொஞ்சம் உதிரிப்பூக்கள், அரளிக்கொம்பு, அரளிக்காய் (முடிச்சுபோட்டது) ஆகியவற்றை மட்டும் வீட்டிற்கு எடுத்து வர வேண்டும். வீட்டிற்கு வந்து வானத்தில் நிலாத் தோன்றியதும், விரதம் மேற்கொண்ட பெரியவர்கள் ஐந்து பேரும் வாசலில் மனைப்பலகைகள் மீது கிழக்கு நோக்கி நிற்க வேண்டும்.



பெண் குழந்தை அவர்களது பாதங்களை நிறை குடத்தில் உள்ள நீரை ஒரு செம்பில் நிரப்பி பெரியோர்களின் கால்களைக் கழுவவேண்டும். பின்னர் பாதங்களில் சந்தனம், குங்குமம் வைத்து மலரிட்டு கால்களைத் தொட்டுக் கும்பிடவேண்டும். வீட்டில் உள்ள பெண்கள் குழந்தையை பெரியவர்களின் நடுவில் நிற்க வைத்து எல்லோர் கைகளிலும் அரளிக்கொம்பை கொடுத்து கையை விரிக்கச் சொல்லி, மோர் விட்டு நிலாவைப் பார்த்து கும்பிடச் சொல்லவேண்டும் மூன்று முறை கும்பிட்ட பின்னர் அரளிக்கொம்பைக்கீழே வைத்து பெரியவர்கள் குழந்தையை வாழ்த்த வேண்டும்.

வீட்டின் தலைவாசலில் கோலம் போட்டு நிலைப்படியில் குழந்தையை கிழக்கு நோக்கி நிற்க வைக்க வேண்டும் குழந்தைக்கு வெளியில் இரண்டு சுமங்கலிகளும் உள்ளே ஒரு சுமங்கலியும் நின்று, சின்னதாகச் செய்த மூன்று மாவிளக்குகளில் திரி போட்டு நெய் தீபம் ஏற்றி, முடிச்சுகள் இட்ட அரளிக்காயை ஒரு தட்டில் வைத்து முன்னால் நிற்கும் சுமங்கலி முடி முடி தாராலு இந்தாண்டம்மா எனச்சொல்லி பின்னால் நிற்பவரிடம் கொடுக்க வேண்டும், அவர் அதை வாங்கி முள்ளா தாராலு இந்தாண்டம்மா என்று பாடிக்கொடுத்த உடன், முன்னாள் நிற்பவர் ஒரு மாவிளக்கு மாவை குழந்தையின் வாயில் போட்டு மெல்லாமல் விழுங்கச் சொல்லவேண்டும். இந்த மாதிரி மூன்று முறை செய்து, பின்பு மூவரும் சேர்ந்து குழந்தையின் வலது கையில் முடிச்சிட்ட அரளிக்காயைக் கட்டவேண்டும்.



அதன் பின்னர் வீட்டிற்குள் வந்து விரதம் இருந்த ஐவரும் குழந்தையோடு அமர்ந்து சாப்பிட வேண்டும். ஐவரும் முதலில் உப்பட்டு, வடை, கச்சாயம், பழம் நெய் சேர்ந்து பிசைந்து ஆளுக்கு ஒரு கை குழந்தைக்கு கொடுக்க வேண்டும். பகல் முழுவதும் விரதம் மேற்கொண்டதால் சாதம், பருப்பு, சாம்பார், ரசம், காய்கறி, அப்பளம் ஆகிய அனைத்தும் படைக்கப்படுதல் வேண்டும். எல்லோரும் சாப்பிட்டு முடித்தவுடன் இலைகளை குழந்தையே மடிக்காமல் எடுக்க வேண்டும். பின்பு பெரியவர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கவேண்டும்.

மறுநாள் காலையில் குழந்தையை குளிக்க வைத்து ஆடை உடுத்தி அலங்கரித்து பூஜைப் பொருட்களோடு (தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம், ஊ துபத்தி, நவதானியம்) கோவிலுக்குச் சென்று பூஜை செய்து வணங்கி பின்பு கையில் கட்டிய அரளிக்காயை அவிழ்த்து சாமி முன் வைக்க வேண்டும். அங்கு பூஜித்த மலர்களுடன் அந்த அரளிக்காயைத் தட்டில் வைத்து எடுத்து வந்து ஜலத்தில் விட வேண்டும். (மஞ்சி மஞ்சி பூவுலு கௌரம்மக்கு வாடின பூவுலு கங்கம்மக்கு) பிற குழந்தைகளும் உடன் செல்லவேண்டும். (அடுத்த ஆண்டு விரதத்தைக் கடைபிடிக்க வேண்டிய குழந்தைகளும் 6, 8, வயது குழந்தைகளும் இவர்களோடு சேர்ந்து கொள்வர்) செல்லும் வழியில் மூன்று இடங்களில் பூத்தட்டை வைத்து கும்மி தட்டவேண்டும். பின்னரே கிணற்றிலோ, ஜலம் உள்ள இடத்திலோ, ஜலத்தில் விட வேண்டும்.





## உத்தாபின சீர் நிறைவேறியமை

சீர் செய்த அடுத்த ஆண்டு கௌரி விரதத்திற்கு உரிய நாள் வரை குழந்தையோடு விரதம் மேற் கொண்ட ஐவரும் நலமாக இருத்தல் வேண்டும். அப்போது தான் விரதம் பூர்த்தி ஆகும். அந்த ஆண்டு கௌரி விரத நாளில் குழந்தையைக் குளிப்பாட்டி விரதம் இருந்து புத்தாடை உடுத்தி அலங்கரித்து கௌரியம்மன் கோவிலுக்கு அழைத்துச்செல்ல வேண்டும். பூ, தேங்காய், பழத்துடன் ஒரு தட்டில் புதிய புடவை ஒன்று, நவதானியம் சிறிது, ரவிக்கைத்துணி வைத்துக்கொண்டு செல்ல வேண்டும்.

அம்மனின் முன் வைத்து உத்தாபின சீர் நல்லவிதமாக செல்லுபடியானதற்கு நன்றி செலுத்தி வணங்க வேண்டும். பின்னர் குழந்தையுடன் சென்ற ஆண்டு விரதம் இருந்த ஐவருக்கும் நல்லெண்ணெய், பருப்பு, புதிய பாத்திரங்களில் பலகாரம் கொடுத்து அனுப்ப வேண்டும்.

நம் முன்னோர்கள் எந்த சீரினையும், சடங்கினையும் காரண காரியங்களின்றி வெறும் பொழுது போக்கிற்காகக் கடை பிடிக்கவில்லை. கம்மவார் குலத்தில் எல்லா சீர்களையும், சடங்குகளையும் வாழ்க்கையின் வழிகாட்டும் நெறிகளாகவே கடை பிடித்து வந்து உள்ளனர். பெண் குழந்தையின் முதல் பருவம் பேதைப்பருவம் அந்த வயதில் குழந்தையின் மனத்தில் நம்மைச் சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகள் மெல்ல மெல்ல வேரூன்றும் எனவே அந்த வயதில் கடைபிடிக்கப்படுகின்ற உத்தாபினச்சீரால் அந்தக் குழந்தையின் உள்ளத்தில் விரதத்தின் நன்மை, பெரியவர்களைப் போற்றி மதித்தல், உறவினர் சூழ்ந்து இருத்தல் தெய்வ வழிபாடு ஆகிய நற்பண்புகள் வேரூன்றுகின்றன. குழந்தை வளர வளர நல்ல பண்புகளும் அவர்களோடு சேர்ந்து வளர்கிறது. அவளால் பிறந்தவீடும், புகுந்த வீடும் நலம் பெறுகிறது. எல்லாம் வல்லவளாகிய பராசக்தியின் வடிவமாகிய கம்மவார் குலத்தில் எல்லம்மாவாகிய ரேணுகா தேவியின் அனுக்கிரகம் கிடைக்கப்பெறும், அவள் மகள் கௌரி அம்மனும் துணையிருப்பாள். அறிவு தோன்றும் வயதிலேயே பெண்மையைப் போற்றி, உத்தாபின சீர், மாராப்பு சீர்களை மேற்கொண்டு வருகின்ற கம்மவார் குலம் இவ்வுலகில் மேன் மேலும் தழைத்து வளர்ந்து ஓங்கும்.

ஸ்ரீ கௌரி அம்மன் திருவடிகளே சரணம்

**- சுபம் -**

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## பொதுத் தனியன்கள்

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்.
யதீந்த் ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

## கூரத்தாழ்வார் அருளிச்செய்தது

லஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்
யோநித்ய மத்யுதபதாம் புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே
ராமானுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

## எம்பெருமானார் தனியன்

யோ நித்ய மச்யுதபதா, ம் பு ஜயுக், ம ருக்ம
வ்யாமோஹதஸ்ததி; தராணி த்ருணாய மேநே.
அஸ்மத்; குரோர்ப க வதோஸ்ய த; யைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத் யே

## நம்மாழ்வார் தனியன்

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ திஸ்
ஸர்வம் யதே வ நியமேந மத ந்வயாநாம்
ஆத் யஸ்ய ந: குலபதேர் வகுளாபி ராமம்
ஸ்ரீ மத்தத ங்க் ரி யுக ளம் ப்ரணமாமி மூர்த் நா

பூ தம் ஸரசய மஹதா ஹ்வய ப ட்டநாத
ஸ்ரீ ப க்திஸார குலசேக ர யோகி வாஹாந்
ப க்தாங்க் ரிரேணு பர கால யதீந்த் திர மிச்ராந்
ஸ்ரீ மத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்
குருமுக மநத்த்ய ப்ராஹ வேதா நஸேஷாந்
நரபதி பரிக்லுப்தம் ஸுல்க மாதாதுகாம:-

ஸ்வஸுர மமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுல திலகம்தம் விஷ்ணுசித்தம் நமாமி.

## திருப்பல்லாண்டு காப்பு

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூ ரென்று ஒருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம் முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து
பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க மெடுத்தூத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று

ஸ்ரீ மதே ராமானுஜாய நம:

## பெரியாழ்வார் அருளிச் செய்த
## திருப்பல்லாண்டு



**"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணாஉன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு"**

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு"
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு"
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே

வாழாட் பட்டுநின் றீருள்ளீ ரேல்,வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட் பட்டுநின் றீர்களை எங்கள்குழுவினில் புகுதலொட்டோம்

ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர் வாழிலங்கை
பாழா ளாகப் படைபொரு தானுக்குப்பல்லாண்டு கூறுதமே

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்வந்து எங்கள் குழாம் புகுந்து"
கூடு மனமுடை யீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ
நாடும் நகரமும் நன்கறி யநமோ நாராய ணாயவென்று
பாடு மனமுடைப் பத்தருள் ளீர்வந்து பல்லாண்டு கூறுமினே

அண்டக் குலத்துக் கதிபதி யாகி அசுரர் இராக்கதரை இண்டைக்
குலத்தை எடுத்துக்களைந்த இருடீகே சன்தனக்கு"
தொண்டைக் குலத்திலுள்ளீர் வந்தடிதொழுது ஆயிரநாமம்
சொல்லி பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தா
ண்டென்மினே



எந்தைதந் தைதந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படி கால்தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதிலரியுருவாகி அரியை யழித்தவனை"
பந்தனை தீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற்பொறியாலே ஒற்றுண்டுநின்று குடிகுடி ஆட்செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல் லானுக்குப்பல்லாண்டு கூறுதுமே

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்"
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்"
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்துஎன்னை வெள்ளுயி ராக்கவல்ல"
பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப்பல்லாண்டு கூறுவனே

உடுத்துக் களைந்தநின் பீதக வாடை யுடுத்துக் கலத்ததுண்டு"
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடும்இத் தொண்டர்களோம்
விடுத்த திசைக்கரு மம்திருத் தித்திருவோணத் திருவிழவில்
படுத்தபைந் நாகணைப் பள்ளிகொண் டானுக்குப்பல்லாண்டு கூறுதுமே

எந்நாள் எம்பெரு மான்உன் தனக்கடியோமென் றெழுத்துப்பட்ட"
அந்நா ளேஅடி யோங்க ளடிக்குடில்வீடுபெற்று உய்ந்ததுகாண்
செந்நாள் தோற்றித் திருமது ரையுள் சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நா கத்தலை பாய்ந்தவ னேஉன்னைப்பல்லாண்டு கூறுதுமே

அல்வழக் கொன்றுமில் லாஅணி கோட்டியர்கோன் அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமா லேநானும் உனக்குப் பழவடியேன்
நல்வகை யால்நமோ நாரா யணாவென்றுநாமம் பலபரவி
பல்வகையாலும் பவித்திர னேஉன்னைப் பல்லாண்டு கூறுவனே

பல்லாண் டென்று பவித்திர னைப்பர மேட்டியை சார்ங்கமென்னும்
வில்லாண் டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டு சித்தன் விரும்பியசொல்"
நல்லாண் டென்று நவின்றுரைப் பார்நமோ நாராய ணாயவென்று
பல்லாண் டும்பர மாத்மனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்




## திருப்பள்ளியெழுச்சி தனியன்கள்

### திருமலையாண்டவன் அருளியது

தமேவ மத்வா பரவாஸு தேவம் ரங்கேஸயம் ராஜவதர்கணீயம்
ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரி ரேணும் பகவந்த மீடே



மண்டங்குடியென்பர் மாமறையோர். மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம். - வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப், பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.



கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனைவிரு ளகன்றது காலையம் பொழுதாய்,
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி,
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த



இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்,
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ,
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்தத மிருஞ்சிற குதறி,
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்



வெள்ளெயி றுறவதன் விடத்தனுக் கனுங்கி,
அழுங்கிய ஆனையி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 2

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி,
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிறு ளகன்றது பைம்பொழில் கமுகின்,
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற



வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ,
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 3

மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்,
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இருந்தின சுரும்பினம் இலங்கையர் குலத்தை,



வாட்டிய வரிசிலை வானவ ரேறே.
மாமுனி வேள்வியைக் காத்து,"அவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் மரசே.
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 4

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி,
கலந்தது குணதிசை கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த,"




அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே." 5

இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ?
இறையவர் பதினொரு விடையரு மிவரோ?
மருவிய மயிலின னறுமுக னிவனோ?



மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி,
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்,
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ?
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 6

அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ?
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ?
இந்திர னானையும் தானும்வந் திவனோ?



எம்பெரு மானுன் கோயிலின் வாசல்,
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
அந்தரம் பாரிட மில்லைமற் றிதுவோ?
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 7




வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா,
எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்.
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ?
தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி,
அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஏதமில் தண்ணுமை யெக்கம்மத் தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி,



கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலு ளெல்லாம்.
மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
ஆதலி லவர்க்குநா ளோலக்க மருள
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே. 9



கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா,
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடியென்னும்
அடியனை, அளியனென் றருளியுன் னடியார்க்
காட்படுத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

## ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## திருப்பாவை தனியன்கள்

## ஸ்ரீ பராசரபட்டர் அருளிச் செய்தது

நீளாது ங்கஸ்த நகிரிதடீஸப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிஸதஸிரஸ்ஸித்தம்த்யாபயந்தீ -
ஸ்வோஷ்டாயாம்ஸ்ரஜீநிகளிதம்
யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்துபூய:

## உய்யக்கொண்டார் அருளிச் செய்தவை

அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கற்கு
பன்னு திருப்பாவை பல்பதியம் இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை, பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்தச் சுடர்கொடியே தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய் - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.



## ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை



மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்
கார் மேனி செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் 1




வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய். 2




ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரி பெய்து

ஓங்கு பெறும் செந் நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய் 3



ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்
ஆழி உள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்
பாழிய் அம் தோளுடைப் பத்பனாபன் கையில்
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சர மழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய் 4




மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத்
தூய பெரு நீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்


தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோ வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய
பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய். 5




புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 6




கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து
வாச நறும் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ 7
தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய்




கீழ் வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலம் உடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாயாய் 8




தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண் வளரும்
மாமான் மகளே! மணிக் கதவம் தாழ் திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றி செவிடோ? அனந்தலோ ?
ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமன் பலவும் நவின்றேலோர் என்பாவாய் 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்.
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் பண்டு ஒரு நாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய். 10




கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்று அரவு அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய் 11




கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம் சேறாக்கும் நற் செல்வன் தங்காய்
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோர் எம்பாவாய் 12




புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்தி மை பாடிப் போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ. பாவாய். நீ நன் நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய். 13




உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுனீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கற் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய். 14




எல்லே இளம் கிளியே இன்னம் உறங்குதியோ
சில் என்று அழையேன் மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்து எண்ணிக்கொள்
வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க 15
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்



நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய
கோயில் காப்பானே. கொடி தோன்றும் தோரண
வாயில் காப்பானே. மணிக் கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா. நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய் 16




அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரம் ஊட அறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்
செம் பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயுன் உறங்கேலோர் எம்பாவாய். 17



உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்தகோபன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல் மேல் பல் கால் குயிலினங்கள் கூவின காண்
பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 18



குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கை மேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்
மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால் 19
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்


முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்
செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்
செப்பென்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய் 20



ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற் கண்
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய் 21




அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய் 22



மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த 23
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்




அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி
சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய் 24




ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய் 25



மாலே. மணிவண்ணா. மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய் 26




கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உந்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே
பாடகமே என்றனைய பலகலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழி வாரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 27



கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உந்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா உந்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உந்தன்னை
சிறு பேர் அழைத்தனமும் சீறி அருளாதே
இறைவா நீ தாராய் பறையேலோர் எம்பாவாய் 28




சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்று ஏவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய் 29



வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திருமுகத்து சேய் இழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரை தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய். 30

## சாற்று முறை - காலை



"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து
உன் பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த் துண்ணும் குலந்திற் பிறந்து நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது"
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்மீஉன்றன்னோ

டுற்றேமே யாவோம்; உனக்கேநா மாட்செய்வோம்"
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

"வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி"
அங்கப் பறைகொண்ட வாற்றைமீ அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன.
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே"
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு"
பல்கோடி நூறாயிரம்"
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு,
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு,
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு,
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

## தென்கலை

ஸர்வதேஸ தஸாகாலேஷ் வவ்யாஹத பராக்ரமா
ராமா நுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்

ராமா நுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரம் உஜ்ஜவலா
திகந்தவ்யாபிநீபூயாத் ஸாஹிலோ கஹிதைஷிணீ.

ஶ்ரீமந்ஶ்ரீ ரங்கஸ்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய
ஶ்ரீமந்ஶ்ரீ ரங்கஸ்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய

நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த ப்ராதயிதே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே.

ராமாநுஜ தயா பாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம்
ஶ்ரீ மத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேஷிகம்

வாழித் திரு நாமம் - நேரிசை வெண்பா
வாழி யிராமா நூசப்பிள்ளாள் மாதகவால்,
வாழு மணிநிக மாந்தகுரு, - வாழியவன்

மாறன் மறையுமிரா மாநுசன் பாடியமும்
தேறும் படியுரைக்கும் சீர்.

வஞ்சப் பலசமயம் மாற்ற வந்தோன் வாழியே,
மன்னு புகழ்ப் பூதூரான் மனமுகப் போன் வாழியே,
கஞ்சத் திருமங்கை யுகக்கந்தோன் வாழியே,
கலியுனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே,
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே,
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே,
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
செந் தமிழ்த் துப்புல் திருவேங் கடவன் தான் வாழியே.

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ - ஞானியர்கள்
சென்னியணி சேர் துப்புல் வேதாந்த தேசிகனே!
இன்ன மொரு நூற்றாண்டிரும்.

வாழியணி துப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழி யவன் பாதாரவிந்தமர் - வாழியவன்
கோதிலாத் தாண் மலரைக் கொண்டாடிக்
கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரள்

## சாற்று முறை- மாலை



"ஆலமா மரத்தின் இலைமே லொருபாலகனாய்"
ஞால மேழுமுண்டா னரங்கத் தரவி னணையான்"
கோல மாமணி யாரமும் முத்துத் தாமமும்
முடிவில்ல தோரெழில்
நீலமேனி, ஐயோ! நிறை கொண்டதென் நெஞ்சினையே!

"கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை"
அண்டர் கோன்அணி யரங்கன் என் னமுதினைக்
கண்ட கண்கள், மற் றொன்றினைக் காணாவே.

# வடகலை

ஸர்வஸே தஸா காலேஷ் வவ்யாஹத பராக்ரமா
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்த தாம்

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரம் உஜ்ஜவலா
திகந்தவ்யபிநீபுயாத் ஸாஹிலொகஹிதைஷிணீ.

ஸ்ரீமந்ஸ்ரீ ரங்கஸ்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமந்ஸ்ரீ ரங்கஸ்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய

நமஸ்ஸ்ரீ ஸைலா தாய குந்தீநகரஜந்மநே
ப்ரஸாத லப்தபரம ப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே.

ஸ்ரீஸைலேஸதயா பாத்ரம் தீபக்த்யா தி குணார்ணவம்
யதீந்தரப் ரவணம் வந்தே ரம்யஜாமா தரமுநிம்.

வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும் மணவாள மாமுனிவன்" - வாழியவன்

மாறன் திருவாய்மொழிப் பொருளை; மாநிலத்தோர்
தேறும்படி யுரைக்குஞ்சீர்.
செய்யாதாமரைத் தாளிணை வாழியே
சேலை வாழி திரு நாபிவாழியே"
துய்ய மார்பும் புரி நூலும் வாழியே
சுந்த ரத்திருத் தோளிணை வாழியே"
கையு மேந்திய முக்கோலும் வாழியே
கருணை ப்பொங்கிய கண்ணிணை வாழியே"
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ"
சடகோபன் தண்தமிழ்நூல் வாழமீ - கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழமணவாள மாமுனியே!'
இன்னும் ஒருநூற்றாண்டு இரும்.

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்"
சோதி மணிமாடந் தோன்றுமூர்"- நீதியால்
நல்லபத்தர் வாழுமூர்" நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோனூர்.

பாதங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்"
வேத மனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை"
வையஞ் சுமப்பதும் வம்பு.

திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே"
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே"
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே"
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னாள் வாழியே"
ஒருநூற்று நாற்பது மூன்றுரைத்தாள் வாழியே"
உயர்ரங்கற்கே கன்னியுகந்தளித்தாள் வாழியே
மருவாருந் திருமல்லி வளநாடு வாழியே"
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே,
ஆண்டாள் திருவடிகளே சரணம்.


## ஸ்ரீ மதே ராமானுஜாய நம: நாச்சியார் திருமொழி
## வாரணமாயிரம்




வாரண மாயிரம் சூழவ லம்செய்து,
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்,
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்,
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான். 1




நாளை வதுவை மணமென்று நாளிட்டு,
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பான்,ஓர்
காளை புகதக் கனாக்கண்டேன் தோழீநான். 2




இந்திர னுள்ளிட்ட தேவர்கு ழாமெல்லாம்,
வந்திருந் தென்னைம கட்பேசி மந்திரித்து,
மந்திரக் கோடியு டுத்திம ணமாலை,
அந்தரி சூட்டக்க னாக்கண்டேன் தோழீநான். 3




நாற்றிசைத் தீர்த்தங்கொ ணர்ந்துந னிநல்கி,
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெ டுத்தேத்தி,
பூப்புனை கண்ணிப்பு னிதனோ டென்றன்னை,
காப்புநாண் கட்டக்க னாக்கண்டேன் தோழீநான். 4



கதிரொளி தீபம் கலசமு டனேந்தி,
சதிரிள மங்கையர் தாம்வந்தெ திர்கொள்ள,
மதுரையார் மன்ன னடிநிலை தொட்டு, எங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான். 5




மத்தளம் கொட்டவ ரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து, என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான். 6




வாய்நல் லார்நல்ல மறையோதி மந்திரத்தால்,
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து.
காய்சின மாகளி றன்னானென் கைப்பற்றி.
தீவலம் செய்யக்க னாக்கண்டேன் தோழீநான். 7



இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்,
நம்மையு டையவன் நாராய ணன்நம்பி,
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி,
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான். 8



வரிசிலை வாள்முகத் தென்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித்தென் னைமுன்னே நிறுத்தி,
அரிமுக னச்சுதன் கைம்மேலென் கைவைத்து,
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீநான். 9



குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து,
மங்கல வீதி வலம்செய்து மணநீர்,
அங்கவ னோடு முடஞ்சென்றங் கானைமேல்,
மஞ்சன மாட்டக்க னாக்கண்டேன் தோழீநான். 10



ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை,
வேயர் புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல்,
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்,
வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வரே. 11

## தீபம் ஏற்றும் போது சொல்லவேண்டிய பாசுரம்

வையம் தகளியா வார்கடலே நெய்யாக.
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல் மாலை,
இடராழி நீங்குகவே என்று

பொய்கையாழ்வார்






அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா. - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

பூதத்தாழ்வார்

## தீபம் ஏற்றியபின் சொல்லவேண்டிய பாசுரம்



திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன். திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன். செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்.
என்னாழி வண்ணன்பால் இன்று.

பேயாழ்வார்

## தியாகராஜ கீர்த்தனை

## ஸீதா கல்யாண

### பல்லவி

ஸீதா கல்யாண வைபோகமே (ஸீதா)
(ராமா கல்யாண வைபோகமே)

### சரணங்கள்

1. பவநு ஸ்துதி பாத்ர பாவன சரித்ர
ரவி ஸோம வர நேத்ர ரமணீய காத்ர (ஸீதா)

2. பத்தஜன பரிபால ப்ரித சரஜால
புக்தி முக்தித லீல பூதேவபால (ஸீதா)

3. பாமராஸுர பீம பரிபூர்ண காம
ச்யாம ஜகதபி ராம ஸாகேத தாம (ஸீதா)

4. ஸர்வ லோகாதார ஸமரைக வீர
கர்வ மானஸ தூர கனகாக தீர (ஸீதா)

5. நிகமாகம விஹார நிருபம சரீர
நகதராக விதாரநத லோகாதார (ஸீதா)

6. பரமேசனுத கீத பவஜலதி போத
தரணிகுல ஸஞ்ஞாத த்யாகராஜ னுத (ஸீதா)

## சீதா கல்யாணம் தெளிவுரை

சீதா தேவியின் திருமணவைபவமே ஆனந்தம்
இராமபிராணின் திருமண வைபவமே ஆனந்தம்
ஆஞ்சநேயரால் வணங்கப்படுபவன்
புனிதமான சரித்திரத்தை உடையவன்
சூரியனையும் சந்திரனையும் கண்களாக கொண்டவன்
வடிவழகானவன் பக்தர்களை பரிபாலிட்டு

பூ தேவர்களை காப்பவன்
அம்பறாதூணிஉடையவன்
போகம் மோட்சம் இவற்றை லீலைகளாக கொண்டவன்
அரக்கர்களுக்கு பயத்தை கொடுப்பவன்
உலகத்திற்கு மகிழ்ச்சியை ஆனந்தமாக கொடுப்பவன்
இணையற்ற வீரன் அயோத்தியில் வாழ்பவன்
வேதங்களில் சஞ்சரித்து பாவங்களை போக்குபவன்
சம்சாரம் எனும் சாகரத்தை கடக்க ஓடம் போன்றவன்
சூரியகுலத்தோன்றல் தியாகராஜனால் வணங்கப்படும் தெய்வம்

## ஸ்ரீ வேங்கடேச மங்களாசாஸநம்

ஸ்ரீய: காந்தாய கல்யாண நிதயே (அ)ர்த்திநாம் ।
ஸ்ரீ வேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥

லக்ஷ்மீ எஸ்விப்ரமாலோக ஸுப்ரு விப்ரம சக்ஷுஷே ।
சக்ஷே ஸர்வலோகாநாம் வேங்கடேசாய மங்களம் ॥

ஸ்ரீ வேங்கடாத்ரி இருங்காக்ர மங்களாபரணாங்க்ரயே ॥
மங்காளாநாம நிவாஸாய வேங்கடேசாய மங்களம் ॥

ஸர்வாவயப் ஸௌந்தர்ய ஸம்பதா ஸர்வசேதஸாம் ।
ஸதா ஸம்மோஹநாயாஸ்து வேங்கடேசாய மங்களம் ॥

நித்யாய நிரவத்யாய ஸத்யாநந்நசிதாத்மநே ।
ஸர்வாந்தரநமநே ஸ்ரீமத் வேங்கடேசாய மங்களம் ॥

ஸ்வதஸ் ஸர்வவிதே ஸர்வவிதே ஸர்வசக்தயே
ஸர்வசேக்ஷினே
ஸுலபாய ஸுலசீலாய வேங்கடேசாய மங்களம் ॥

பரஸ்மை ப்ரஹ்மணே பூர்ணகாமாய பரமாத்மநே ।
ப்ரயுஜே பரதத்வாய வேங்கடேசாய மங்களம் ॥

ஆகால தத்வ மச்ராந்த மாத்மநா மநுபச்யதாம் ।
அத்ருப்த்யம்ருதரூபாய வேங்கடேசாய மங்களம் ॥

ப்ராயஸ் ஸ்வசரணௌ பும்ஸாம் சரண்யத்வேந பாணிநா ।
க்ருபயா திசதே ஸ்ரீமத் வேங்கடேசாய மங்களம் ॥

தயாம்ருத தரங்கிண்யா ஸ்தரங்கைரிவ சீதலை அபாங்கை
:ஸிஞ்சதே விஸ்வம் வேங்கடேசாய மங்களம் ॥

ஸ்ரக்பூஷாம்பரஹேதீநாம் ஸுஷமாவஹமூர்த்தயே
டுஸர்வார்த்திசமநாயாஸ்து வேங்கடசாய மங்களம் ॥

ஸ்ரீ வைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரிணீதடே ।
ரமயா ரமமாணாய வேங்கடேசாய மங்களம் ॥

ஸ்ரீமத் ஸுந்தர ஜாமத்ரு முநிமாநஸ வாஸிநே ।
ஸர்வ லோக நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥

மங்களாசாஸநபரைர் மதாசார்ய புரோகமை;
ஸர்வைச்சபூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

